ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 160 — 1975 අප්‍රේල් 18 වැනි සිකුරාදා — 1975.04.18

160 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 3 1 | பரீட்சகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 337 |

*கவனிக்க.—தெங்கு அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலமும் மகாவலி அபிவிருத்திச் சபை (திருத்தம்) சட்டமூலமும் 1975 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறை நிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

## பதவிகள்—வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப்பதவிக்கு சிரேட்ட தாரதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக்குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தாரதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத்தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகாண்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிரூபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையான விடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1973 ம் [illegible] டிசெம்பர் மீ 15 ந் உ.

---

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, பிணைக் களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தி யோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத் தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர் களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்.**

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர் கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனை களுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப் பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதா வது ஒரு நேரத்தில் காரணம் ஏதும் கொடுக்கா மலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக் காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும்வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக் கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதி காண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண் டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப் பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந் தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதி லும் (ஏடுபுடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதிலும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக் கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தி யுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப் படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத் துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய் தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற் பாடுகளுள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையா விட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியா யத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிர யோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட வர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கெனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத் தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படு மிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கெனவே நிரந்தர/தற்காலிக பதவி களை வகிப்பதுடன் ஏற்கெனவே வைத்திய பரீட் சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற் றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தி யோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க் குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்களாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத் தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேத னத்திலிருந்து 6 சதவீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்த கைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையை செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதிய முள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத் தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தர மான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படு வார்கள். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

5 : 3 அரச சேவையிலுள்ள ஓய்வூதியத்துக்குரிய நியமனங் களை 1971.12.31 ஆந் திகதியன்று வகித்தவர்களும் உள்ளூ ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக 1972.01.01 ஆந் தேதியின் பின் விடுக் கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்களுக்கும் 1971.12.31 ஆந் தேதியன்று ஓய்வூதியத்துக்குரிய நியமனங்களை உள்ளூ ராட்சிச் சேவையில் வகித்தவர்களும் அரச சேவையிலுள்ள ஓய்வூதியத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக 1972.01.01. ஆந் தேதியின் பின் விடுவிக்கப்பட்டவர்களுமான உத்தியோகத்தர்களுக்கும் முறையே உள்ளூராட்சிச் சேவை யிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களின் பதவிகளில் அவர் களுக்குமட்டுமுரியதாக ஓய்வூதியத் தகைமை அனுமதிக்கப் படும்.

5 : 4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்துக்குரியவையான அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக 1972.01.01 ஆந் தேதியின் பின் விடுவிக்கப்பட்டவர்களும், 1971.12.31 ஆந் தேதியன்று ஓய்வூதியத்துக்குரித்துடையவர்களாக இருந்தவர்களுமான தரைப் படை, கடற்படை வான்படை என்பனவற்றின் நிலைப்படை ஆளணியினர்க்கு, அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத் தகைமை அனுமதிக்கப்படும். ஆயினும், அவர்களது தரைப்படை, கடற்படை, வான்படைச் சேவை, ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புக்களின் கீழுள்ள அவர்களது ஓய்வூதியத்துக்குரித்துடைய சேவையுடன் ஓய்வூதியத்துக் காகக் கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.

6. யுத்த சேவைச் சலுகை

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், நியமிக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காதுவிடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்

7 : 1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாக பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை

8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

சுகாதார திணைக்களம்

கைப்பணிப் போதனாசிரியர் பதவி

சுகாதாரத் திணைக்களத்தில் கைப்பணிப் போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ளதைப் போன்ற மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்து 05.05.1975 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ எனக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை வைத்தனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் " கைப் கணிப் போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பம் " என்று தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

2. திரட்டிய சம்பளம்.—ரூபா 2,760—15 × 60—ரூபா 3,540 வருடம் ஒன்றுக்கு.

3. வயதெல்லை.—விண்ணப்பங்கள் முடிவுறுந் திகதியன்று வேட்பாளர்கள் 24 வயதுக்குக் குறையாதவர்களாகவும், 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

4. கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.—

(அ) (i) வேட்பாளர் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அன்றேல் அதற்கும் உயர்வான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) அரசாங்க நிறுவகம் ஒன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாபனத்தில் வழங்கப்பட்ட கைப்பணித் தகுதித் தேர்வுப் பத்திரம் (டிப்ளோமா) பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) கைப்பணியில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் (சான்றிதழ்கள் மூலம் ஆதாரம் காட்டப்பட வேண்டும்).

(iv) தும்பு, தேங்காய்ச் சிரட்டைக் கைப்பணியிலும், றேந்தை பின்னல், மரச் செதுக்கு வேலை, பொம்மை செய்தல் என்பவற்றிலும் அறிவு இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—உருப்படியான சமூக நலப்பணியில் தகைமை அல்லது செயல் அனுபவம் உடைய வேட்பாளர்களுக்கு முன்னிடம் தரப்படும்.

5. நியமன நியதிகள்.—பதவி நிரந்தரமானது. நியமனம் (புரொவிடென்ற் பண்ட்) ஏற்பாட்டு நிதிய அடிப்படையிலானது.

6. வேட்பாளர்கள் கீழ்க்காணும் பத்திரங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தங்கள் விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பு நோக்கத்துக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.) - (பிறப்புச் சான்றிதழ் அல்லது பதிவாளர் அதிபதியால் வழங்கப் பெற்ற ஒரு விசேட சான்றிதழ் (பிறப்புகள் பதிவு செய்யப்படாதோரின் விடயத்தில்) வயதுக்கான ஒரு சான்றாக ஏற்றுக் கொள்ளப்படும்).

(ஆ) பெற்றுள்ள அதியுயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(இ) (டிப்ளோமா) தகுதித் தேர்வுப் பத்திரம்.

(ஈ) அனுபவச் சான்றிதழ்.

(உ) விண்ணப்பக்காரரின் குணத்தைக் குறிப்பிடும் வகையில் அண்மையில் பெற்ற இரண்டு சான்றிதழ்கள்.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I தொகுதி (II அ) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

பி. ஜீ. ஜீ. தர்மசிறி,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்)
சுகாதார சேவைப் பணிப்பாளருக்காக.

சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலகம்,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு -1,

மாதிரி விண்ணப்பப் படிவம்

கைப்பணிப் போதனாசிரியர் பதவி

1. முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. தற்போதைய முகவரி :————.

3. பிறந்த திகதியும் விண்ணப்பம் முடிவுறும் திகதியில் வயதும் : ————.
பிறந்த திகதி :—
வருடங்கள்————, மாதங்கள்————, நாட்கள்————.

4. நாட்டினம் (வம்சாவழியாகவா பதிவினாலா இலங்கையர்) :—

5. இப்போது ஏதாவது பதவியிலிருப்பின் அது :————.

6. கல்வித் தகைமைகள் :————.

7. பெற்றுள்ள (டிப்ளோமா) தகுதித் தேர்வுப் பத்திரம் பற்றிய விபரங்கள் :————.

8. பெற்றுள்ள அனுபவம் பற்றிய விபரங்கள் :————.

9. மற்றும் உரிமைக் கோரிக்கைகள் பற்றிய விபரங்கள் :————.

இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதன்கண் உள்ள விபரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப் படுமிடத்துத் தகைமை நீக்கஞ் செய்யப்படுதற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நட்ட ஈடு எதுவுமின்றி வேலை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை யான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

4-307 18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

தகவற் திணைக்களம்

உதவி நிழற்படப்பிடிப்பாளர் பதவி

தகவற் திணைக்களத்தில் உதவி நிழற்படப்பிடிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கமைய விண்ணப்பங்கள் தயாரிக்கப்பெற்று கொழும்பு 1 இல் சேர் பாரன் ஜயதிலக மாவத்தையில் 7 ஆம் இலக்கத்திலுள்ள தகவல் அதிபதியை 1975.05.16 ஆந் தேதிக்கு முன்னராகச் சென்றடையும் வண்ணம் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். இவ்வலுவலகத்தால் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா. அஞ்சல் உறையின் இடது பக்க மேல் மூலையில் " உதவி நிழற்படப்பிடிப்பாளர் பதவி " எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

2. சம்பள அளவுத் திட்டம்.—ஆண்டொன்றுக்கு இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :

ரூ. 3,000—ரூ. 90—ரூ. 5,160

3. நியமன நியதிகள்.—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்துக்குத் தமது திரட்டிய சம்பளத்தின் 6% விகிதத்தைக் கொடுப்பனவு செய்யத் தேவைப்படுத்தப்படுவார். அச்சம்பளத்தின் 9% விகிதத்துக்குச் சமமான தொகையொன்றை அரசு கொடுத்துதவும். நியமனம், முதற்கண் மூன்று ஆண்டுகளுக்குத் தகுதிகாண் அடிப்படையிலமைந்ததாகும். 1971.12.31 ஆந் தேதியன்று அரச சேவையில் நிரந்தரமான, ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றை வகித்து வந்த அலுவலரொருவர் தெரிவுசெய்யப்படின், புதிய பதவியிலும் ஓய்வூதிய உரிமையைத் தொடர்ந்து அனுபவித்துவர அவர் உரித்துடையவராவார்.

அரச சேவையில் நிரந்தரமான, ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றை வகித்துவரும் அலுவலர் தெரிவு செய்யப்படின், குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்துக்குப் பதில் கடமையாற்ற அவர் நியமிக்கப்படுவார்.

4. வேண்டப்படும் தகைமைகள்.—பின்வருவனவற்றிற்கு ஒவ்வொரு விண்ணப்பதாரரும் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) நற்குணமுடையவராயும் உடனலமுடையவராயும் இருத்தல் ;

(ஆ) 1975.05.16 ஆம் தேதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல். (ஏற்கனவே அரசசேவையில் உள்ளோருக்கு மேல் வயதெல்லைக் கட்டுப்பாடு ஏற்புடைத்தாகாது)

(இ) (i) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத் தடவைகளிற் தோற்றி, சிங்களம்/தமிழ், எண் கணிதம்/கணிதம் உட்பட ஆறு (6) பாடங்களில் ; அல்லது சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் என்பன உட்பட, முற்போந்தவற்றிற்கு ஈடான அல்லது மேலான பரீட்சையிற் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ii) நிழற்படப்பிடிப்பு வேலையில் உறுதியான அறிவும் அதற்கேற்ற உளச் சார்பும் உடையவராக இருத்தல். நற்பெயர்பெற்ற நிழற்படப்பிடிப்பு நிறுவனமொன்றில் (ஐந்து) 5 ஆண்டுகள் அல்லது அதனிலும்மிக காலம் பருமனுக்கல், பதனிடல், (நிழற்) படம் பதியவைத்தல் ஆகியவற்றில் அனுபவமுடையமைபற்றிச் சான்று காட்டவல்லோராக இருப்போர் முன்னுரிமையளிக்கப் பெறுவர்.

குறிப்பு.—ஏலவே அரசுச் சேவையிலுள்ள, கனிட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்துள்ள அலுவலர்கள், பிறவாறு தகைமைகொண்டோராக இருக்கும் பட்சத்தில், இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

5. பின்வரும் ஆவணங்கள் யாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையேனும் முன்னிலைப்படுதுமாறு வேண்டப்படும்போது விண்ணப்பதாரர்கள் அவற்றை முன்னிலைப்படுத்தல் வேண்டும்.

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு. ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

(ii) ஆகவுயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(iii) உயர்தொழில் தகைமை அத்துடன்/அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ்கள்.

(iv) சிங்களத்தில் சித்தியடைந்த ஆகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

(v) விண்ணப்பதாரரின் குணநலம், திறமை, பதவியில் நியமிக்கப்படுவதற்குரிய தகுதி என்பன தொடர்பாக அண்மையில் பெறப்பட்ட மூன்று சான்றிதழ்கள் (ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் இவ்வுட்பிரிவின்கீழ் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை)

குறிப்பு.—(i) சாதனங்களையேனும் சாதனங்களின் பிரதிகளையேனும் விண்ணப்படிவத்துடன் இணைத்தலாகாது.

(ii) சாதனங்களை முன்னிலைப்படுத்துமாறு கோரப்படும்போது அவற்றை முன்னிலைப்படுத்தத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களத் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறற்கென விதிக்கப்படும் இறுதித் தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படமாட்டா.

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது. இவ்விளம்பரத்தின் தேவைகள் ஒவ்வொன்றினையும் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. விண்ணப்பங்களையும் அவை தொடர்பான வேறு கடிதத் தொடர்புகளையும் தகவல் அதிபதிக்கு முகவரியிட்டு அனுப்ப வேண்டுமே தவிர இத்திணைக்களத்தின் எந்த ஒரு அலுவலருக்காயினும் நேராக அல்ல.

10. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்தக் கசெற்றில் முதலாம் பகுதியின் (II அ) தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளன. அற்றைப் பார்க்குக.

நிட்ஜ்வே திலகரத்ன,
தகவல் அதிபதி.

தகவற் திணைக்களம்,
கொழும்பு-1,
1975.04.02 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

தகவற் திணைக்களம்—உதவி நிழற்படப்பிடிப்பாளர் பதவி

1. முழுப்பெயர் :————.
(பெரிய எழுத்துக்களில்)
(அ) முதற் பெயர் :————.
(ஆ) இதர பெயர்கள் :————.

2. (அ) நிரந்தர அஞ்சல் முகவரி :————.
(ஆ) அலுவலக முகவரி :————.

3. (அ) 1975.05.16 ஆம் திகதியன்று வயது :—
ஆண்டுகள்————மாதங்கள்———— நாட்கள்————
(ஆ) பிறந்த தேதி :————.

4. தேசிய இனம் :————.

(i) பதிவுவழி இலங்கைப் பிரசையா அல்லது வம்சாவழி இலங்கைப் பிரசையா ?:————.

(ii) வம்சாவழி இலங்கைப் பிரசையெனின், பின்வருவோர் பிறந்த இடங்களைத் தருக :————.
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பாட்டன் :————
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தைவழிப் பூட்டன் :————

5. குடிநிலை :————.

6. கல்வி, ஏனைய தகைமைகள் :————.
(சம்பந்தப்பட்ட கசெற் அறிவித்தலின் 4(இ) (1) ஆம், (ii) ம் பந்தியின் பிரகாரம் தேவைப்படுத்தப்பட்ட விபரங்கள்).

7. பாடசாலையிலிருந்து விலகிய காலந்தொட்டு வகித்த பதவிகள் அத்துடன்/அல்லது பெற்ற பயிற்சி விபரங்கள் :————.

8. அரசாங்கத் திணைக்களமொன்றில், அல்லது அரசாங்கத் துறைசார்ந்த சபையில்/கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், வர்த்தக வங்கிகள், பல்கலைக்கழகங்கள், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழுள்ள கூட்டுப்பங்குக் கம்பனிகள் போன்றவை உட்பட) சேவையிலமர்த்தப்பட்டிருந்தால், சேவை முடிவுற்றமைக்கான காரணங்கள்.

9. சட்டநீதிமன்றமெதிலும், குற்றத் தவறொன்றுக்காக எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால், தவறு, தண்டனை தொடர்பான முழு விபரங்களைத் தருக :————

10. குணச்சான்றிதழ்கள் வழங்கிய மூவரது பெயர்களும் முகவரிகளும் :————.

11. ஏனைய விபரங்கள், ஏதாவது இருப்பின் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதன் கண் காணப்படும் விபரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தகைமை நீக்கஞ் செய்யப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இழப்பீடு எதுவுமின்றிச் சேவை நீக்கஞ்செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நானறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்.

1. திரு.......................................இத் திணைக்களத்தில் கடமை புரிகிறாரெனவும் ;

2. அவரது வேலையும் நடத்தையும் திருப்திகரமானவை எனவும் ;

3. இவ்வலுவலகத்தில் பேணப்படும் பதிவுகளின்படி அவரது விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையெனவும், இப் பதவி தொடர்பாகச் சம்பந்தப்பட்ட கசெற் அறிவித்தலின் 4 ஆம் பந்தியில் வேண்டப்பட்டுள்ள சகல தகைமைகளையும் அவர் கொண்டுள்ளாரெனவும் உறுதிப்படுத்துகிறது.

கையொப்பம் :————.
பெயர் :————.
பதவிப் பெயர் :————.

————,
திணைக்களத் தலைவர்.

4-606 - 18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல: 160

---

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு திணைக்களம்

நூலகப் பொறுப்பாளர் பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு திணைக்களத்தில் நூலகப் பொறுப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள படிவ அமைவு பெறுவனவாகி 1975 வைகாசி மாதம் 9 ஆந் தேதி அன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைத்தல் வேண்டும்.

1. வேதன அளவுத்திட்டம்.—இப்பதவிக்குரிய திரட்டு வேதனம், ஆண்டொன்றுக்கு ரூபா 3,000—90×24—5,160/- ஆகும். ரூபா 3,810/- உம் ரூபா 4,530/- உம் பெறுமுன் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் உண்டு.

2. சேர்வு நியதிகள்.—இப்பதவி நிரந்தரமானது. தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்துக்கு உதவுத் தொகை வழங்கவேண்டும்.

குறிப்பு.—அரசசேவையில் ஏலவே ஓய்வூதியமுள்ள பதவியை வகிக்கும் ஒருவர் இப்பதவிக்கு தெரியப்படின் அவரின் நியமனம் ஓய்வூதியமுள்ளதென கருதப்படும்.

3. விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்கு தக்க சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) 1975 வைகாசி 9 இல் 21 வயதுக்கு குறையாததும் 30 வயதுக்கு மேற்படாததுமான வயதுடையவராயிருத்தல் வேண்டும்.

(அரச சேவையில் ஏலவே உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லைகள் அமைவுடையன அன்று.)

(ஆ) கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும் ;

சிங்களம்/தமிழ், ஆங்கிலபாஷை உட்பட மூன்று திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது க. பொ. த. (சாதாரண தர)ப் பத்திர பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; நூலக வேலையில் அனுபவமுடையோருக்கும், நூல்களை அறிவுக்கூர்மையுடன் தரப்படுத்தி பட்டியற்படுத்தும் ஆற்றலுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4. விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்துடன் பின்வருவனவற்றின் படிகளை இணைத்தனுப்புதல் வேண்டும். (படிகள் திருப்பியனுப்பப்படமாட்டாது.)

1. பிறப்புப்பதிவுச் சான்றிதழ்.

2. கல்விச் சான்றிதழ்.

3. அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள்.

5. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமனம் பெறுவோருக்கு பொருத்தமான பொது நிபந்தனைகளை இக் கசற்றின் பகுதி I, பிரிவு (II அ) வில் பார்க்க.

கே. எச். எல். குலதிலக,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

எந்திரவியற் பணியாளர் கிளை,
கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு-1,
03.04.1975.

விண்ணப்பப்படிவம்

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுத் திணைக்களம்
நூலகப் பொறுப்பாளர் பதவி

1. முழுப்பெயர் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. பிறந்த தேதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழின் படி இணைத்தல் வேண்டும்.)
4. சாதியம் :————.
5. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? :————.
6. கல்வி/தொழிற் தகைமைகள் :————.
(படிகள் இணைத்தல் வேண்டும்.)
7. பாடசாலையிலிருந்து விலகியபின் செய்த தொழில்களின் விபரங்கள் அல்லது பின்பற்றிய பயிற்சி நெறிகள் :————.
8. அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது யாக்கமொன்றில் ஏலவே விண்ணப்பகாரர் பதவிகள் வகித்திருப்பின் அவற்றிலிருந்து விலகலுக்கான காரணங்கள் :————.
9. நீதிமன்றமொன்றில் ஏதேனும் குற்றவியற் தவறுக்காக எமக்கு குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? இருப்பின் குற்றத்தின் தன்மையையும் தண்டனையையும் கூறுக : ————.
10. நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ள மூவர் பெயர்களும் பதவி நிலைகளும் :————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

4 333—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

கமத்தொழில் திணைக்களம்

ஆராய்ச்சி தகுதிகாண் உத்தியோகத்தர்/ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி

கமத்தொழிற் திணைக்களத்திலுள்ள ஆராய்ச்சி தகுதிகாண் உத்தியோகத்தர்/ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த விளம்பரத்தில் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு, செயலாளர், விவசாய காணி அமைச்சு, 315, வைக்சோல் வீதி, த. பெ. இல. 569, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள் : 1975 மே மாதம் 09 ம் திகதி.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் :1975 மே மாதம் 16 ம் திகதி.

குறிப்பு:—

(1) மாதிரி விண்ணப்ப பத்திரத்தின்படி தயாரிக்கப்படாத பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாளராவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். இவ் அபேட்சகர்கள் விரும்பினால், விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை விவசாயக் காணி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாடுகளிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்கான கட்டணத்தையும், இலங்கைக்குப் பிரயாணஞ் செய்வதற்கான தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(1) பதவி நிரந்தரமானதாகும். அ. சே. ச. நிதிக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். இந்நியமனம் முதற்கண் மூன்று ஆண்டுகளுக்கு தகுதிகாண் நிலையில் அமையும்.

(2) பரீட்சார்த்த காலமாகிய 3 வருடத்துள் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் ஓர் பயிற்சியை பெற வேண்டியேற்படும். விவசாய திணைக்களத்தால் குறிக்கப்படும் தன்மையுடைய வெளிநாட்டுப் பயிற்சியை பெறவேண்டி அவருக்கு/அவளுக்கு ஏற்படும். பயிற்சிக் காலத்தை திருப்திகரமாக முடித்து திணைக்களம் தீர்மானிக்கும் பயிற்சியை அவர்/அவள் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியில் நிரந்தரம் ஆக்கப்படுவர்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :வருடத்துக்கு ரூபா 7,440 இல் ஆரம்பமாகி ரூபா 360 வருடாந்த அதிகரிப்பு 10 உம் ரூபா 480 வருடாந்த அதிகரிப்பு 11 உம் உள்ளதாக ரூபா 16,320 வரை அதிகரிக்கும். (ரூபா 11,520 உம் ரூபா 14,880 உம் சம்பளத் திட்டத்தை அடைய முன் வினைத்திறமைகாண்தடை உண்டு.)

குறிப்பு:—

(அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் வருடமொன்றுக்கு—ரூபா 11,520 க்கு மேலாகுமுன் குறிப்பிடப்பட்ட முதுமானிப் பட்டம் அல்லது டிப்புளோமாப் பட்டத்தில் உயர்ந்த தரத்தையுமோ, தனது சொந்த வேலை சம்பந்தமான விஞ்ஞான நடவடிக்கைகளில் பெறவேண்டும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையிலிருந்து முதுமாணிப் பட்டம் (எம். எஸ். சி.) அல்லது கலாநிதி (பிஎச். டி.) பட்டத்தைப் பெற்றுள்ள அபேட்சகர்கள், தெரிவுசெய்யப்படுவராயின், அவர்கள் மேற்கூறிய விகிதத்தின் பிரகாரம் வருடமொன்றுக்கு ரூபா 7,800 ஆன சம்பளத்தில் அமர்த்தப்பட தகுதியுடையவராவர்.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) சித்தியடைந்த அபேட்சகர்கள் 1975.05.09 இல் 30 வயதுக்குக் கூடாதவர்களாகவும் அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் முதுமாணிப் பட்டம் பெற்றவர்கள் 35 வயதுக்குக் கூடாதவர்களாயும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு கிடையாது.)

(இ) (1) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் விவசாயத்தில் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது கீழ்க்காணும் பாடங்களில் ஒன்றினைப் பிரதான பாடமாகப் பெற்றிருத்தல் வேண்டும் :

(அ) தாவரவியல்
(ஆ) விலங்கியல்
(இ) இரசாயனம்
(ஈ) விவசாயப் பொறியியல்

(2) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் கீழ்க்காணும் வேலை ஒன்றின் சம்பந்தமாகச் சட்ட முதுமாணிப் பட்டம் பெற்றவராய் இருத்தல் வேண்டும் :

(அ) பிரயோக பூச்சியியல்
(ஆ) தாவர நோயியல்
(இ) மண் கூற்றியல்
(ஈ) மண் விஞ்ஞானம்
(உ) பூங்கனியியல்
(ஊ) தாவர வளர்ப்பு
(எ) விவசாய பொறியியல்
(ஏ) பயிராக்கவியல்
(ஐ) உணவு நுட்பவியல், அல்லது

(3) இத்திணைக்களத்தில் பதவி நிரந்தரப்பட்ட 10 வருட சேவை செய்த உத்தியோகத்தர் ஆராய்ச்சியில் விருப்புள்ளவராயும், அங்கீகரிக்கப்பட்ட சர்வகலா

சாலையில் விவசாயப் பட்டம் பெற்றவராயும் அல்லது கீழ்க்கானும் பாடம் ஒன்றினை பிரதான பாடமாக எடுத்தவராயும் இருத்தல் வேண்டும் :

(அ) தாவரவியல்

(ஆ) விலங்கியல்

(இ) இரசாயனம்

(ஈ) விவசாயப் பொறியியல்

குறிப்பு.—அனுபவம் உம்/அல்லது முதுமாணிப் பட்டம் தகைமையுள்ள அபேட்சகர்களுக்கு சலுகை அளிக்கப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப்பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு.—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு. இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்தகைமையும் தொழிநுட்பத் தகைமையும்/ உயர் தொழிற்தகைமையும் அல்லது தொழிநுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களத்தில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும்அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், (II அ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பகாரர்களுக்கு விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து இரண்டு கிழமைகளுள் விண்ணப்பம் கிடைத்தமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே, எனக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம்து விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

ஏ. டீ. எம். சில்வா,
செயலாளர்,
விவசாயக் காணி அமைச்சு.

விவசாயக் காணி அமைச்சு,
315, வைக்சோல் வீதி,
த. பெ. இல. 569,
கொழும்பு 2,
1975.04.08.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(சாதனங்களையோ சாதனங்களின் பிரதிகளையோ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் ஆகாது)

கமத்தொழில் திணைக்களம்

ஆராய்ச்சி தகுதிகாண் உத்தியோகத்தர்/ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி

1. முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :————.
(அஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்.)

3. (அ) பிறந்த திகதி :—
வருடம்.————. மாதம்.————. நாட்கள்.————.
(ஆ) உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று சரியான வயது :————.

4. நீர் இலங்கைப் பிரஜையா ? வம்சாவழி அல்லது பதிவுப் பிரஜையா ? எனக் குறிப்பிடுக :————.
(இலங்கைப் பதிவுப் பிரஜையானல் பத்திரத் தொடர்பு இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.)

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை.————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

குறிப்பு.—விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (ஆ) அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வுடன் சேர்த்து நிரப்பப்படுதல் வேண்டும். அவர் இலங்கையில் பிறக்காதவிடத்து (அ) வுடன் (ஆ), (இ) என்பனவோ அல்லது (இ), (ஈ) என்பனவும் நிரப்பப்படுதல் வேண்டும்.

6. (அ) ஆணா ? பெண்ணா ?
(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் :————.

7. (1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம் இவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :————.

8. 12 ம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள், வேறு கல்வித் தாபனங்கள் :————.

| பாடசாலை—கல்லூரி | தொட்டு—முடிய |
|---|---|
| 1. | |
| 2. | |

| கல்வித்தாபனம் | தொட்டு—முடிய |
|---|---|
| 1. | |
| 2. | |

9. விளையாட்டுக்களின் விபரங்களும், மற்றும் அதில் பெற்ற திறமை தகைமைகளும், அத்துறையில் பதவி வகித்த பொறுப்பான உத்தியோகத்தின் விபரங்களும் :————.

10. நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா ? கடன் பொறுப்புக்கள் இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புக்களின் அளவுகள் என்ன ? :————.

11. சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்ற பாதகத்திற்கு குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானால் வழக்கு இலக்கத்தை எடுத்துக்காட்டி திகதிகளோடு முழு விபரங்களையும் குறிப்பிடுக :————.

12. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வித் தகைமைகள் :————.
(பல்கலைக் கழகத்தில் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வித் தகமைகள் முதலியவற்றின் விபரங்களைத் திகதி, சித்தி தரம் இருந்தால் அவை எடுத்த பாடங்கள், கல்வித் தாபனப் பெயர்களை இவற்றுடன் தருக.)

13. இப்போதைய தொழிலும், முன்னர் ஏதேனும் பதவியிலிருந்தால் அப்பதவிகளும் :————.

(பதவி ஏற்றுக்கொண்ட திகதியும், விட்டு விலகிய திகதியும், கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்படல் வேண்டும்.)

| | பதவி | தொட்டு—முடிய | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

முக்கியம்.—அரசாங்கம் உத்தியோகத்திலிருந்து நீக்கிய காரணம் கீழேயுள்ள 15 ஆம் நிரல் பிரிவில் குறிப்பிடப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறித்துக் காட்டிய விசேட தகைமைகள் அல்லது அனுபவம் உடையவரா? அப்படியானால் அவற்றின் முழு விபரங்களைத் திகதிகளுடன் தருக. அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் ஏதாவது விசேட தேவைகள் குறித்துக் காட்டப்பட்டிருந்தால் பார்க்குக :————.

15. ஓர் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அரசாங்கத் துறைச் சபையில்/யாக்கத்தில் (மத்திய வங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், வர்த்தக வங்கிகள், பல்கலைக் கழகங்கள், அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் கட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் முதலியன உட்பட) பதிவுக்கமர்த்தப்பட்டிருப்பின், தொழிலிலிருந்து நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் :————.

16. மேலும் வேறு விபரங்கள் :————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப்படுவேன் என்றும் நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையென்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப்படுவேன் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

விண்ணப்பகாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அப்பகுதித் தலைவரின் அறிக்கை :————.

————.
திணைக்கள/அமைச்சு தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

4–355/1—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

இலக்கம் 2/1/131

## கமத்தொழிற்றிணைக்களம்

### கிராமப் பொருளாதார உத்தியோகத்தர் பதவி

கமத்தொழிற்றிணைக்களத்தில் கிராமப் பொருளாதார உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலில் காணப்படும் விண்ணப்பப் பத்திரத்திற்கமைந்த விண்ணப்பங்கள் பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் செயலாளர், காணி, விவசாய அமைச்சு, இலக்கம் 315, வொக்சோல் வீதி, தபால் பெட்டி எண் 569, கொழும்பு 2, அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 09 திகதி மே மாதம் 1975.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 16 திகதி மே மாதம் 1975.

குறிப்பு :

(i) இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் தபாலில் தொலைந்து விட்டது அல்லது தாமதமாகியது போன்ற குற்றச்சாட்டு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. கடைசித் தினம் வரை தாமதப்படுத்துபவர்கள் தங்கள் இழப்பிலேயே அதைச் செய்யவேண்டி நேரிடும்.

(iii) விண்ணப்பங்களை இலங்கை காணி, விவசாய அமைச்சுச் செயலாளருக்கு அனுப்புவதற்காக வேண்டி, வெளிநாடுகளில் இருப்போர் தாம் விரும்பின் தமது விண்ணப்பங்களை, அங்குள்ள இலங்கை கைத் தூதுவர் காரியாலயத்திற்கு அல்லது தாம் வதியும் நாட்டிற்கு அண்மையிலுள்ள இலங்கைத் தூதுவர் காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(iv) வைத்தியப் பரீட்சையும் பிரயாணச் செலவும்.—வெளிநாடுகளில் உள்ள இலங்கை உத்தியோகத்தர்கள் பதவிக்குத் தெரியப்படின், தமது தேக சௌக்கியத்தை உறுதிப்படுத்த அங்கீகரிக்கப்பட்ட வைத்திய அதிகாரியின்முன் தோற்ற வேண்டும். இதற்காக ஏற்படும் பிரயாணச் செலவையும் வைத்தியச் செலவையும் உத்தியோகத்தர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2. வேலைக்கமர்த்தல் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—பதவி நிரந்தரமானது. பொ. சே. சே. நி. உதவு தொகை வழங்க வேண்டும். நியமனம், முதலில் மூன்று வருட காலத்திற்குப் பரீட்சார்த்தமாக விளங்கும்.

3. சம்பளமும் படியும்.—பதவிக்குரிய திரட்டிய வேதனம் பின் வருமாறு. வருடாந்தம் ரூபா 6,720 லிருந்து வருடாந்தம் 360 ஐக் கொண்ட 12 ஏற்றமும் ரூபா 480 ஐக் கொண்ட 11 ஏற்றமும் கொண்டு வருடாந்தம் ரூபா 16,320 வரையாகும். (வினைத்திறமைகாண் தடை ரூபா 11,520 இன் போதும், ரூபா 14,880 இன் போதும், இடம் பெறும்.)

குறிப்பு.—வினைத்திறமைகாண் தடை ரூபா 11,520 ற்கு முன் பதவியேற்றஞ் செய்யப்படுவதற்கு உத்தியோகத்தர்கள் குறிப்பிடப்பட்ட திணைக்களப் பரீட்சையொன்றில் சித்தியடைவதற்கு வேண்டப்படுவார்.

4. தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளுக்குச் சான்று தரவேண்டும் :—

(அ) திறமைமிகு நன்நடத்தையும் தேக உறுதியும் உடையவர் ;

(ஆ) 09-05-1975 இல் 22 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருப்பவர். பட்டமேற்படிப்புடன் கூடிய விண்ணப்பதாரியின் விடயத்தில் வயதுக் கட்டுப்பாடு 35 ஆகும். (அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாடு இல்லை) ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் விவசாயத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புப் பட்டதாரி ;

அல்லது

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் கிராமப் பொருளாதார பட்டமேற்படிப்பு பட்டதாரி ;

அல்லது

(உ) கிராமப் பொருளாதாரத்தில் 10 வருட அனுபவத்துடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் அல்லது 15 வருட அனுபவத்துடன் கூடிய விவசாய டிப்புளோமா பட்டம்.

5. கேட்கப்படும்பொழுது அபேட்சகர் ஏதாவது அல்லது சகல சாதனங்களையும் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுவார் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (குறிப்பு.—உதவிபெறும் பாடசாலைகளின் பிரமாணங்களின் தேவைக்காக வழங்கப்படும் பிறப்புப் பத்திரம் அல்லது ஞானஸ்நானப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) பட்டப்படிப்பு அல்லது உயர்கல்விச் சான்றிதழ் ;

(இ) இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள். இதில் ஒன்று படிப்பகப் பணிப்பாளர், அல்லது பாட ஆசிரியர் அல்லது பேராசிரியரிடம் இருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர் தொழில் சான்றிதழ் உம்/அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் ;

அத்துடன்

(உ) சிங்களப்பாசையில் சித்திபெற்றதற்கான உயர் பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :

(i) விண்ணப்பத்துடன் சாதனங்கள் அல்லது சாதனங்களுடைய பிரதிகளை அனுப்பக்கூடாது.

(ii) கேட்கப்படும்பொழுது சாதனங்களைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரச சேவையில் உள்ளோர்களின் விண்ணப்பம் திணைக்கள தலைவர்கள் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். ஆயினும், முடிவு தினத்தில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியைப் பற்றி செயலாளர், காணி, விவசாய அமைச்சு அவர்களுக்கு நேரடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.

7. விண்ணப்பம் மற்றும் அது தொடர்பான தொடர்புகளைக் காணி, விவசாய செயலாளருக்கே விலாசமிடல் வேண்டும். திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் யாருக்கேனும் தனிப்பட்ட ரீதியில் அனுப்புதல் கூடாது.

8. இவ் வர்த்தமானி பகுதி I : பிரிவு (IIஅ) இல் காணப்படும் அரச சேவை நியமனத்திற்கான பொது நிபந்தனைகளைக் கவனிக்குக.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது பற்றிய அறிவுப்புகள் அனுப்பப்படும். முடிவு திகதியிலிருந்து இரண்டு வார காலத்தினுள் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றிய அறிவித்தல் கிடைக்காவிடின் அதை உடனடியாக எனது கவனத்திற்குக் கொண்டு வரவும்.

ஏ. ரி. எம். சில்வா,
செயலாளர்,
காணி, விவசாய அமைச்சு.

காணி, விவசாய அமைச்சு,
315, வொக்சோல் வீதி,
தபால் பெட்டி எண். 569,
கொழும்பு 2, 1975-04-08.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(சாதனங்களையோ சாதனங்களின் பிரதிகளையோ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் ஆகாது)

கமத்தொழிற்றிணைக்களம்

கிராமப் பொருளாதார உத்தியோகத்தர் பதவி

1. முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :————.
(அஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்).

3. (அ) பிறந்த திகதி :—.
வருடம் :————. மாதம் :————.
நாட்கள் :————.

(ஆ) உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று சரியான வயது :————.

4. நீர் இலங்கைப் பிரஜையா? வம்சாவழி அல்லது பதிவுப் பிரஜையா எனக் குறிப்பிடுக :————.
(இலங்கைப் பதிவுப் பிரஜையானால் பத்திரத் தொடர்பு இலக்கமும் திகதியும் குறிப்பிடுக)

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

குறிப்பு.—விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (ஆ) அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வுடன் சேர்த்து நிரப்பப்படுதல் வேண்டும். அவர் இலங்கையில் பிறக்காதவிடத்து (அ) வுடன் (ஆ) (இ) என்பனவோ அல்லது (இ) (ஈ) என்பனவும் நிரப்பப்படுதல் வேண்டும்.

6. (அ) ஆணா? பெண்ணா? :————.
(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் :————.

7. (1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம் இவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :————.

8. 12 ம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள், வேறு கல்வித் தாபனங்கள் :—

| பாடசாலை/கல்லூரி | தொட்டு–முடிய | கல்வித்தாபனம் | தொட்டு–முடிய |
|---|---|---|---|
| 1. | | 1. | |
| 2. | | 2. | |

9. விளையாட்டுகளின் விபரங்களும் மற்றும் அதில் பெற்ற திறமைத் தகைமைகளும், அத்துறையில் பதவி வகித்த பொறுப்பான உத்தியோகத்தின் விபரங்களும் :————.

10. நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா : கடன் பொறுப்புக்கள் இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புக்களின் அளவுகள் என்ன :————.

11. சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்ற பாதகத்திற்கு குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா? அப்படியானால் வழக்கு இலக்கத்தை எடுத்துக்காட்டி திகதிகளோடு முழுவிபரங்களையும் குறிப்பிடுக :————.

12. பாடசாலைக் கல்வி உத்தியோகக் கல்வித் தகைமைகள் :————.

(பல்கலைக் கழகத்தில் சகல பட்டங்கள் திறமைகள், உத்தியோகக் கல்வித் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களைத் திகதி, சித்தி, தரம் இருந்தால் அவை எடுத்த பாடங்கள், கல்வித் தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக)

13. இப்போதைய தொழிலும், முன்னர் ஏதேனும் பதவியிலிருந்தால் அப்பதவிகளும் :—

(பதவி ஏற்றுக்கொண்ட திகதியும், விட்டு விலகிய திகதியும் கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்படல் வேண்டும்).

| பதவி | தொட்டு–முடிய | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

முக்கியம்.—அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீக்கிய காரணம் கீழேயுள்ள 15 ம் நிரல் பிரிவில் குறிப்பிடப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறித்துக் காட்டிய விசேட தகைமைகள் அல்லது அனுபவம் உடையவரா? அப்படியானால் அவற்றின் முழுவிபரங்களைத் திகதிகளுடன் தருக. அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் ஏதாவது விசேட தேவைகள் குறித்துக் காட்டப்பட்டிருந்தால் பார்க்குக :————.

15. ஓர் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அரசாங்கத் துறைச் சபையில்/யாக்கத்தில் (மத்திய வங்கி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், வர்த்தக வங்கிகள், பல்கலைக் கழகங்கள், அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனிகள் முதலியன உட்பட) பதவிக் கமர்த்தப்பட்டிருப்பின், தொழிலிருந்து நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் :————.

16. மேலும் வேறு விபரங்கள் :————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்றும் நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையென்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப்படுவேன் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

விண்ணப்பகாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அப்பகுதித் தலைவரின் அறிக்கை :—.

————,
திணைக்கள/அமைச்சு தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

4-355/2—18.04 75 ந் திகதிய வர்த்தமானி இல I60

இலக்கம் 2/1/133

## கமத்தொழிற்றிணைக்களம்

### பண்ணை முகாமையாளர் சிறப்பறிஞர் உத்தியோகத்தர் பதவி

கமத்தொழிற்றிணைக்களத்தில் பண்ணை முகாமை சிறப்பறிஞர் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலில் காணப்படும் விண்ணப்பப் பத்திரத்திற்கமைந்த விண்ணப்பங்கள் பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் செயலாளர், காணி விவசாய அமைச்சு, இலக்கம் 315, வொக்சோல் வீதி, தபால் பெட்டி எண் 569, கொழும்பு 2 அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 09.05.1975

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 16.05.1975

குறிப்பு.—(i) இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் தபாலில் தொலைந்து விட்டது அல்லது தாமதமாகியது போன்ற குற்றச்சாட்டு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. கடைசித் தினம் வரை தாமதப்படுத்துபவர்கள் தங்கள் இழப்பிலேயே அதைச் செய்ய வேண்டி நேரிடும்.

(iii) விண்ணப்பங்களை இலங்கை காணி, விவசாய அமைச்சுச் செயலாளருக்கு அனுப்புவதற்காக வேண்டி, வெளி நாடுகளில் இருப்போர் தாம் விரும்பின் தமது விண்ணப்பங்களை, அங்குள்ள இலங்கைத் தூதுவர் காரியாலயத்திற்கு அல்லது தாம் வதியும் நாட்டிற்கு அண்மையிலுள்ள இலங்கைத் தூதுவர் காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(iv) வைத்தியப் பரீட்சையும் பிரயாணச் செலவும்.—வெளிநாடுகளில் உள்ள இலங்கை உத்தியோகத்தர்கள் பதவிக்குத் தெரியப்படின், தமது தேக சௌக்கியத்தை உறுதிப்படுத்த அங்கீகரிக்கப்பட்ட வைத்திய அதிகாரியின் முன் தோற்ற வேண்டும். இதற்காக ஏற்படும் பிரயாணச் செலவையும் வைத்தியச் செலவையும் உத்தியோகத்தர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. **வேலைக்கமர்த்தல் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானது; பொ. சே. சே. நி. உதவு தொகை வழங்க வேண்டும். நியமனம், முதலில் மூன்று வருட காலத்திற்குப் பரீட்சார்த்தமாக விளங்கும்.

3. சம்பளமும் படியும்.—பதவிக்குரிய திரட்டிய வேதனம் பின்வருமாறு: வருடாந்தம் ரூபா 6,720 இலிருந்து வருடாந்தம் ரூபா 360 ஐக் கொண்ட 12 ஏற்றமும் ரூபா 480 ஐக் கொண்ட 11 ஏற்றமும் கொண்டு வருடாந்தம் ரூபா 16,320 வரையாகும். (வினைத்திறமைகாண் தடை ரூபா 11,520 இன் போதும், ரூபா 14,880 இன் போதும் இடம்பெறும்.)

குறிப்பு.—வினைத்திறமைகாண் தடை ரூபா 11,520 ற்கு முன் பதவியேற்றஞ் செய்யப்படுவதற்கு உத்தியோகத்தர்கள் குறிப்பிடப்பட்ட திணைக்களப் பரீட்சையொன்றில் சித்தியடைவதற்கு வேண்டப்படுவார்.

4. தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளுக்குச் சான்று தரவேண்டும் :—

(அ) திறமைமிகு நன்னடத்தையும் தேக உறுதியும் உடையவர்.

(ஆ) 09.05.1975 இல் 22 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருப்பவர்; (பட்டமேற்படிப்புடன் கூடிய விண்ணப்பதாரியின் விடயத்தில் வயதுக் கட்டுப்பாடு இல்லை);

(இ) பண்ணை முகாமையில் 5 வருடத்திற்குக் குறையாத அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விவசாயப் பட்டதாரி.

அல்லது

(ஈ) பண்ணை முகாமையில் 15 வருடத்திற்குக் கூடிய அனுபவத்துடன் விவசாய டிப்ளோமா பெற்றவர்.

5. கேட்கப்படும் பொழுது அபேட்சகர் ஏதாவது அல்லது சகல சாதனங்களையும் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுவார்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (குறிப்பு.—உதவிபெறும் பாடசாலைகளின் பிரமாணங்களின் தேவைக்காக வழங்கப்படும் பிறப்புப் பத்திரம் அல்லது ஞானதீட்சைப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.);

(ஆ) பட்டப்படிப்பு அல்லது உயர்கல்விச் சான்றிதழ்;

(இ) இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள். இதில் ஒன்று படிப்பகப் பணிப்பாளர், அல்லது பாட ஆசிரியர் அல்லது போராசிரியரிடம் இருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர் தொழில் சான்றிதழ் உம்/அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ்.

அத்துடன்

(உ) சிங்களப் பாஷையில் சித்திபெற்றதற்கான உயர் பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) விண்ணப்பத்துடன் சாதனங்கள் அல்லது சாதனங்களுடைய பிரதிகளை அனுப்பக்கூடாது.

(ii) கேட்கப்படும் பொழுது சாதனங்களைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரச சேவையில் உள்ளோர்களின் விண்ணப்பம் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். ஆயினும், முடிவு தினத்தில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியைப் பற்றி செயலாளர், காணி விவசாய அமைச்சு அவர்களுக்கு நேரடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.

7. விண்ணப்பம் மற்றும் அது தொடர்பான தொடர்புகளைக் காணி, விவசாய செயலாளருக்கே விலாசமிடல் வேண்டும். திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் யாருக்கேனும் தனிப்பட்ட ரீதியில் அனுப்புதல் கூடாது.

8. இவ் வர்த்தமானி பகுதி I; பிரிவு (IIஅ) இல் காணப்படும் அரச சேவை நியமனத்திற்கான பொது நிபந்தனைகளைக் கவனிக்குக.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றிய அறிவிப்புகள் அனுப்பப்படும். முடிவு திகதியிலிருந்து இரண்டு வார காலத்தினுள் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றிய அறிவித்தல் கிடைக்காவிடின் அதை உடனடியாக எனது கவனத்திற்குக் கொண்டுவரவும்.

ஏ. ரி. எம். சில்வா,
செயலாளர்,
காணி, விவசாய அமைச்சு.

காணி, விவசாய அமைச்சு,
315, வொக்சோல் வீதி,
தபால் பெட்டி எண் 569,
கொழும்பு 2,
1975.04.08.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

(சாதனங்களையோ சாதனங்களின் பிரதிகளையோ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் ஆகாது)

#### கமத்தொழிற்றிணைக்களம்

#### பண்ணை முகாமை சிறப்பறிஞர் உத்தியோகத்தர் பதவி

1. முழுப்பெயர் :———.
(தெளிவான எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :———.
(அஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்)

3. (அ) பிறந்த திகதி :—
வருடம் :———. மாதம் :———. நாட்கள் :———.

(ஆ) உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று சரியான வயது :———.

4. நீர் இலங்கைப் பிரஜையா? வம்சாவழி அல்லது பதிவுப் பிரஜையா எனக் குறிப்பிடுக :———.
(இலங்கைப் பதிவுப் பிரஜையானால் பத்திரத் தொடர்பு இலக்கமும் திகதியும் குறிப்பிடுக)

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பகாரர் :———.

(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :———.

(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :———.

(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :———.

குறிப்பு.—விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (ஆ) அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வுடன் சேர்த்து நிரப்படுதல் வேண்டும் அவர் இலங்கையில் பிறக்காதவிடத்து (அ) வுடன் (ஆ), (இ) என்பனவோ அல்லது (இ), (ஈ) என்பனவும் நிரப்பப்படுதல் வேண்டும்.

6. (அ) ஆணா ? பெண்ணா ? :————.

(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் :————.

7. (1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம் இவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :————.

8. 12 ம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள், வேறு கல்வித் தாபனங்கள் :————.

| பாடசாலை/கல்லூரி தொட்டு -முடிய | கல்வித்தாபனம் தொட்டு-முடிய |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |

9. விளையாட்டுக்களின் விபரங்களும் மற்றும் அதில் பெற்ற திறமை, தகைமைகளும், அத்துறையில் பதவி வகித்த பொறுப்பான உத்தியோகத்தரின் விபரங்களும் :————.

10. நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா ? கடன் பொறுப்புக்கள் இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புக்களின் அளவுகள் என்ன ? :————.

11. சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்ற பாதகத்திற்கும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானால் வழக்கு இலக்கத்தை எடுத்துக்காட்டி திகதிகளோடு முழு விபரங்களையும் குறிப்பிடுக :————.

12. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வித் தகைமைகள் :————.

(பல்கலைக் கழகத்தில் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வித் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களைத் திகதி, சித்தி, தரம் இருந்தால் அவை எடுத்த பாடங்கள், கல்வித் தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக.)

13. இப்போதைய தொழிலும், முன்னர் ஏதேனும் பதவியிலிருந்தால் அப்பதவிகளும் :————.

(பதவி ஏற்றுக்கொண்ட திகதியும், விட்டு விலகிய திகதியும், கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்படல் வேண்டும்.)

| பதவி | தொட்டு-முடிய | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

முக்கியம்.—அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் கீழேயுள்ள 15 ம் நிரல் பிரிவில் குறிப்பிடப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறித்துக் காட்டிய விசேட தகைமைகள் அல்லது அனுபவம் உடையவரா ? அப்படியானால் அவற்றின் முழு விபரங்களைத் திகதிகளுடன் தருக. அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் ஏதாவது விசேட தேவைகள் குறித்துக் காட்டப்பட்டிருந்தால் பார்க்குக :————.

15. ஓர் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அரசாங்கத் துறைச் சபையில்/யாக்கத்தில் (மத்திய வங்கி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், வர்த்தக வங்கிகள், பல்கலைக் கழகங்கள், அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் முதலியன உட்பட) பதிவுக்கமர்த்தப்பட்டிருப்பின், தொழிலிலிருந்து நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் :————.

16. மேலும் வேறு விபரங்கள் :————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்றும் நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையென்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப்படுவேன் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

விண்ணப்பகாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அப்பகுதித் தலைவரின் அறிக்கை :—

————.
திணைக்கள/அமைச்சு தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

4-355/3—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

குறிப்பு இலக்கம் : 2/1/134

## கமத்தொழிற்றிணைக்களம்

### மண் விஞ்ஞானி உத்தியோகத்தர்

கமத்தொழிற்றிணைக்களத்தில் மண் விஞ்ஞானி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலில் காணப்படும் விண்ணப்பப் பத்திரத்திற்கமைந்த விண்ணப்பங்கள் பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் செயலாளர், காணி, விவசாய அமைச்சு, இலக்கம் 315, வொக்சோல் வீதி, தபால் பெட்டி எண் 569, கொழும்பு 2 அவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 09 திகதி மே மாதம் 1975.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 16 திகதி மே மாதம் 1975.

குறிப்பு :

(i) இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் தபாலில் தொலைந்துவிட்டது அல்லது தாமதமாகியது போன்ற குற்றச்சாட்டு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. கடைசித்தினம் வரை தாமதப்படுத்துபவர்கள் தங்கள் இழப்பிலேயே அதைச் செய்ய வேண்டி நேரிடும்.

(iii) விண்ணப்பங்களை இலங்கை காணி, விவசாய அமைச்சுச் செயலாளருக்கு அனுப்புவதற்காக வேண்டி, வெளிநாடுகளில் இருப்போர் தாம் விரும்பின் தமது விண்ணப்பங்களை, அங்குள்ள இலங்கைத் தூதுவர் காரியாலயத்திற்கு அல்லது தாம் வதியும் நாட்டிற்கு அண்மையிலுள்ள இலங்கைத் தூதுவர் காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(iv) வைத்தியப் பரீட்சையும் பிரயாணச் செலவும்.—வெளிநாடுகளில் உள்ள இலங்கை உத்தியோகத்தர்கள் பதவிக்குத் தெரியப்படின், தமது தேக சௌக்கியத்தை உறுதிப்படுத்த அங்கீகரிக்கப்பட்ட வைத்திய அதிகாரியின் முன் தோற்ற வேண்டும். இதற்காக ஏற்படும் பிரயாணச் செலவையும் வைத்தியச் செலவையும் உத்தியோகத்தர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. வேலைக்கமர்த்தல் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—பதவி நிரந்தரமானது பொ. சே. சே. நி. உதவு தொகை வழங்க வேண்டும். நியமனம், முதலில் மூன்று வருட காலத்திற்குப் பரீட்சார்த்தமாக விளங்கும்.

3. சம்பளமும் படியும்.—பதவிக்குரிய திரட்டிய வேதனம் பின் வருமாறு :—வருடாந்தம் ரூபா 6,720/- லிருந்து வருடாந்தம் 360/- ஐக் கொண்ட 12 ஏற்றமும் ரூபா 480/- ஐக் கொண்ட 11 ஏற்றமும் கொண்டு வருடாந்தம் ரூபா 16,320/- வரையாகும். (வினைத்திறமைகாண் தடை ரூபா 11,520/- இன் போதும் ரூபா 14,880/- இன் போதும் இடம்பெறும்.)

குறிப்பு :

வினைத்திறமைகாண் தடை ரூபா 11,520/- ற்கு முன் பதவியேற்றுச் செய்யப்படுவதற்கு உத்தியோகத்தர்கள் குறிப்பிடப்பட்ட திணைக்களப் பரீட்சையொன்றில் சித்தியடைவதற்கு வேண்டப்படுவார்.

4. தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளுக்குச் சான்று தரவேண்டும் :

(அ) திறமை மிகு நன்நடத்தையும் தேக உறுதியும் உடையவர் ;

(ஆ) 09-05-1974 இல் 22 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருப்பவர், பட்டமேற்படிப்புடன் கூடிய விண்ணப்பதாரியின் விடயத்தில் வயதுக் கட்டுப்பாடு 35 ஆகும் (அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு இல்லை) ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு விவசாயப் பட்டதாரி ; அல்லது.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விசேட இரசாயனவியல் பட்டதாரி ;

(உ) மண் ஆராய்ச்சி வேலையில் 5 வருட அனுபவத்துடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரி.

5. கேட்கப்படும்பொழுது அபேட்சகர் ஏதாவது அல்லது சகல சாதனங்களையும் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுவார் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (குறிப்பு.—உதவிபெறும் பாடசாலைகளின் பிரமாணங்களின் தேவைக்காக வழங்கப்படும் பிறப்புப் பத்திரம் அல்லது ஞானதீட்சைப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) ;

(ஆ) பட்டப்படிப்பு அல்லது உயர்கல்விச் சான்றிதழ் ;

(இ) இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் ; இதில் ஒன்று படிப்பகப் பணிப்பாளர், அல்லது பாட ஆசிரியர் அல்லது போராசிரியரிடம் இருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர் தொழில் சான்றிதழ் உம்/அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் ; அத்துடன்

(உ) சிங்களப்பாசையில் சித்திபெற்றதற்கான உயர் பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :

(i) விண்ணப்பத்துடன் சாதனங்கள் அல்லது சாதனங்களுடைய பிரதிகளை அனுப்பக்கூடாது.

(ii) கேட்கப்படும்பொழுது சாதனங்களைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரச சேவையில் உள்ளோர்களின் விண்ணப்பம் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். ஆயினும், முடிவு தினத்தில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியைப் பற்றி செயலாளர், காணி, விவசாய அமைச்சு அவர்களுக்கு நேரடியாகத் தெரியப்படுத்த வேண்டும்.

7. விண்ணப்பம் மற்றும் அது தொடர்பான தொடர்புகளைக் காணி, விவசாய செயலாளருக்கே விலாசமிடல் வேண்டும். திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் யாருக்கேனும் தனிப்பட்ட ரீதியில் அனுப்புதல் கூடாது.

8. இவ் வர்த்தமானி பகுதி I : பிரிவு (II அ) இல் காணப்படும் அரச சேவை நியமனத்திற்கான பொது நிபந்தனைகளைக் கவனிக்குக.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றிய அறிவுப்புகள் அனுப்பப்படும். முடிவு திகதியிலிருந்து இரண்டு வார காலத்தினுள் ஏற்றுக் கொள்ளப்பட்டது பற்றிய அறிவித்தல் கிடைக்காவிடின் அதை உடனடியாக எனது கவனத்திற்குக் கொண்டுவரவும்.

ஏ. ரி. எம். சில்வா,
செயலாளர்,
காணி, விவசாய அமைச்சு.

காணி, விவசாய அமைச்சு,
315, வொக்சோல் வீதி,
தபால் பெட்டி எண் : 569,
கொழும்பு 2,
08-04-1975.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(சாதனங்களையோ சாதனங்களின் பிரதிகளையோ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் ஆகாது.)

கமத்தொழிற்திணைக்களம்

மண் விஞ்ஞானி உத்தியோகத்தர் பதவி

1. முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :————.
(அஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்)

3. (ஆ) பிறந்த திகதி :————.
வருடம் :————. மாதம் :————. நாட்கள் :————.
(ஆ) உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று சரியான வயது :————.

4. நீர் இலங்கைப் பிரஜையா ? வம்சாவழி அல்லது பதிவுப் பிரஜையா எனக் குறிப்பிடுக :————.
(இலங்கைப் பதிவுப் பிரஜையானால் பத்திரத் தொடர்பு இலக்கமும் திகதியும் குறிப்பிடுக)

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பகாரர் :————.
(ஆ) விண்ணப்பகாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பகாரரின் தந்தைவழிப் பூட்டன் :————.

குறிப்பு.—விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (ஆ) அல்லது (இ), (ஈ) இரண்டும் (அ) வுடன் சேர்த்து நிரப்பப்படுதல் வேண்டும். அவர் இலங்கையில் பிறக்காவிடத்து (அ) வுடன் (ஆ), (இ) என்பனவோ அல்லது (இ), (ஈ) என்பனவும் நிரப்பப்படுதல் வேண்டும்.

6. (அ) ஆணா ? பெண்ணா ? :————.
(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் :————.

7. (1) சிங்களம், (2) தமிழ், (3) ஆங்கிலம் இவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :————.

8. 12 ம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள், வேறு கல்வித் தாபனங்கள் :————.

| பாடசாலை/கல்லூரி தொட்டு-முடிய | கல்வித்தாபனம் தொட்டு-முடிய |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |

9. விளையாட்டுகளின் விபரங்களும் மற்றும் அதில் பெற்ற திறமைத் தகைமைகளும், அத்துறையில் பதவி வகித்த பொறுப்பான உத்தியோகத்தின் விபரங்களும் :————.

10. நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா ? கடன் பொறுப்புக்கள் இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புக்களின் அளவுகள் என்ன ? :————.

11. சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்ற பாதகத்திற்கு குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானால் வழக்கு இலக்கத்தை எடுத்துக்காட்டி திகதிகளோடு முழு விபரங்களையும் குறிப்பிடுக :————.

12. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வித் தகைமைகள் :
————.

(பல்கலைக் கழகத்தில் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வித் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களைத் திகதி, சித்தி, தரம் இருந்தால் அவை எடுத்த பாடங்கள், கல்வித் தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக)

13. இப்போதைய தொழிலும், முன்னர் ஏதேனும் பதவியிலிருந்தால் அப்பதவிகளும் :————.

(பதவி ஏற்றுக்கொண்ட திகதியும், விட்டு விலகிய திகதியும், கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்படல் வேண்டும்)

| பதவி | தொட்டு—முடிய | ஆண்டுச்சம்பளம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

முக்கியம்.—அரசாங்கம் உத்தியோகத்திலிருந்து நீக்கிய காரணம் கீழேயுள்ள 15 ம் நிரல் பிரிவில் குறிப்பிடப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறித்துக் காட்டிய விசேட தகைமைகள் அல்லது அனுபவம் உடையவரா? அப்படியானால் அவற்றின் முழுவிபரங்களைத் திகதிகளுடன் தருக. அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் ஏதாவது விசேட தேவைகள் குறித்துக் காட்டப்பட்டிருந்தால் பார்க்குக :————.

15. ஓர் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அரசாங்கத் துறைச் சபையில்/யாக்கத்தில் (மத்திய வங்கி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், வர்த்தக வங்கிகள், பல்கலைக் கழகங்கள், அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படும் கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் முதலியன உட்பட) பதிவுக்கமர்த்தப்பட்டிருப்பின், தொழிலிலிருந்து நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் :————.

16. மேலும் வேறு விபரங்கள் :————.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவை என்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப்படுவேன் என்றும் நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையென்று கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப்படுவேன் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

விண்ணப்பகாரர் அரசாங்க சேவையில் இருப்பவரெனின் அப்பகுதித் தலைவரின் அறிக்கை :—

————,
திணைக்கள/அமைச்சு தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

4-355—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### தெப்பத் தலைவர் பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் தெப்பத் தலைவர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பின்வரும் படிவு அமைவு பெறுவனவாகி 09.05.1975 அன்று அல்லது அதற்கு முன்னர் எனக்கு கிடைத்தல் வேண்டும்.

1. வேதன அளவுத்திட்டம்.—இப்பதவிக்குரிய திரட்டு வேதனம் : ஆண்டொன்றுக்கு ரூபா 4,296—114—5,800/-

2. சேர்வு நியதிகள்.—பதவி நிரந்தரமானது. தேர்ந்தெடுக்கப் வரும் பின்வரும் தகைகையுடையவர் என்பதற்குத் தக்க சான்றுவத்தொகை வழங்க வேண்டும்.

குறிப்பு.—1971.12.31 அன்று ஓய்வூதியமுள்ள பதவியை வகிக்கும் அலுவலர் ஒருவர் தெரியப்படின் ஓய்வூதிய அடிப்படையில் அவர் நியமிக்கப்படுவார்.

3. வேண்டப்படும் தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதறகுத் தக்க சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) மிகச் சிறந்த ஒழுக்க நலமும் உடல் நலமுமுடையவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) 1975.05.09 ஆந் தேதியன்று 25 வயதுக்குக் குறையாததும் 45 வயதுக்கு மேற்படாததுமான வயதுடையவராகவிருத்தல் வேண்டும்.

(ஏலவே அரச சேவையிலுள்ள விண்ணப்பக்காரருக்கு இவ்வயதெல்லைகள் அமைவுடையன அன்று.)

(i) ஆகக்குறைந்தது கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) கடற்படை நிர்வாகத் துறையில் பெற்றேல் இலாஞ்சுகளுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலராக 3 வருட அநுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—குடித்துறை எந்திரவியல் நிர்மாண பேணல் வேலைகள் பற்றிய அறிவு சிறப்பாக கடலோர வேலைகள் பற்றிய அறிவு பெற்றிருப்பின் அது மேலதிக தகைமையாக அமையும்.

விண்ணப்பதாரர் தங்களுடைய விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் படிகளை இணைத்தனுப்புதல் வேண்டும் :—

(i) பிறப்புப்பதிவுச் சான்றிதழ்.

(ii) கல்வி சார்ந்த அதியுயர்ந்த தகைமைச் சான்றிதழ்.

(iii) அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள். (இவற்றின் பிரதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.)

5. அரசாங்க கசற்றின் பகுதி I : பிரிவு (II அ) இல் பிரசுரிக்கப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்க்க.

கே. எச். எஸ். குணதிலக,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

பொறித்துறைப் பிரிவு,
கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
1975.02.18

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### தெப்பத் தலைவர் பதவி

1. முழுப்பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த தேதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழின் படி இணைத்தல் வேண்டும்.)

4. தேசிய இனம் :————.

5. விவாகமானவரா, விவாகமாகாதவரா :————.

6. கல்வி, தொழில் நுட்பத்தகைமைகள்/கல்வி அல்லது தொழில் நுட்பத்தகைமைகள் :————.
(சான்றிதகழ்களின் படிகள் இணைத்தல் வேண்டும்)

7. பாடசாலையை விட்டு நீங்கியபின்பு, பின்பற்றிய பயிற்சிநெறிகள் அல்லது செய்த தொழில்களின் வரலாறு :————.

8. அரசாங்கத் திணைக்களங்களில் அல்லது யாக்கங்களில் முன்னர் வகித்த பதவிகளும், அப்பதவிகளிலிருந்து விலகலுக்கான காரணங்களும் :————.

9. விண்ணப்பதாரர் மீது நீதிமன்று ஏதாவது குற்றவியற் தவறுக்கு குற்றத்தீர்ப்பு அளித்திருப்பின் அத்தவறின் தன்மையையும் அதற்கான தண்டனையையும் குறிப்பிடுக :————.

10. நற்சான்றிதழ்கள் வழங்கியுள்ள மூவர் பெயர்களும் பதவி நிலைகளும் :————.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

தேதி :————.

4-356—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

இலுப்பைக் கடவைப் பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி

இலுப்பைக்கடவை, வெள்ளாங்குளம் கிராம சேவையாளர் பகுதிகள் அடங்கிய இலுப்பைக்கடவைப் பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள், கீழ்க்காணும் தகைமைகளையுடையோரிடமிருந்து கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள், 1975 ம் ஆண்டு மே மாதம் 14 ம் திகதியன்று அல்லது அதற்குமுன் கிடைக்கக் கூடியதாக, 'அரசாங்க அதிபர், கச்சேரி, மன்னார்' என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. இப்பதவி குறிப்பிட்ட சம்பள அளவை உடையதல்ல. எனினும், நடைபெறும் ஒவ்வொரு விசாரணைக்கும் ரூபா 10.00 வீதம் வழங்கப்படும்.

3. தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) வயது—விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு குட்படாதவராகவும் 55 வயதிற்கு மேற்படாதவராகவும்;

(ஆ) சிறந்த நற்குணமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவராகவும்;

(இ) மேலே குறிப்பிட்ட பகுதியின் நிரந்தர வதிவாளராகவும்;

(ஈ) சிரேட்ட பாட்சாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில், தமிழ் ஒரு பாடமாகவும் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா. த.) பரீட்சையில், சிங்களம்/தமிழ், எண்கணிதம்/ஆரம்ப கணிதம் ஆகிய பாடங்களுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(உ) மாதாந்த வருமானம் ரூ. 200/- அல்லது அதற்குக் கூடியதாக இருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) மிக உயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ்.

(இ) விண்ணப்பதாரியின் நற்குணத்தைக் குறிக்கும், அண்மையில் பெறப்பட்ட இரு நற்குணச் சான்றிதழ்கள்.

5. அரசாங்க அலுவலர்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், சபைகளிற் பணிபுரிவோர், உள்ளூராட்சி மன்றங்களின் அங்கத்தவர்கள் ஆகியோர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோரல்லர். எனவே, அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள், பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்த மூன்று நாட்களுக்குள் கிடைக்கப் பெற்றமை அறியத்தரப்படும்.

7. இப்பதவி குறித்த முன்னைய அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் தமது விண்ணப்பத்தைப் புதுப்பிக்க வேண்டும்.

ந. ஜெயநாதன்,
மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்.

மன்னார் கச்சேரி,
1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 3 ம் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

இலுப்பைக் கடவைப் பகுதிக்கு திடீர் மரண விசாரணையாளர் பதவி

1. முழுப் பெயர் :————.
(பெரிய எழுத்தில்)

2. முகவரி :————.

3. நிரந்தர வதிவிடமும் வசித்த காலமும் :————.

4. (அ) விண்ணப்ப முடிவுத் திகதியில் சரியான வயது .————
(ஆ) பிறந்த திகதியும் இடமும் :————.

5. விண்ணப்பகாரர் மணமானவரா ? :————.

6. கல்வித் தகைமைகள் :————.

7. நிரந்தரத் தொழில் :————.

8. முன்னர் சேவையில் இருந்திருப்பின் அதுபற்றிய விபரங்கள் :————.

9. விண்ணப்பதாரரின் சொத்துக்களின் அளவும் பெறுமதியும் :————.

10. மாதாந்த வருமானம் :————.

11. கடனாளியாக இருப்பின் அதுபற்றி விபரம் :————.

12. விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தண்டிக்கப்பட்டவரா ? :————.

13. விசேட உரிமைக் கோரிக்கைகள் இருப்பின், அவை பற்றிய விபரங்கள் :————.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————.

4-351—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

தேசிய பாற்சபை

தேசிய பாற்சபையிலுள்ள கீழ்வரும் பதவிகட்கு, ஸ்ரீ லங்காவின் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்திலேயே விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டுக் கீழே கையொப்பமிட்டவருக்கு 1975.04.30 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

(i) தலைமைக் கணக்குப் பதிவியலாளர் தரம் V

(அ) தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் பின்வரும் தகுதிகள் உடையவரென அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

(1) 1975.04.30 அன்று 25 வயதிற்குக் குறையாதவராயும் 45 வயதிற்கு மேற்படாதவராயும் உள்ளார்.

(2) நல்லொழுக்கமும் திடகாத்திரமும் உடையவர்.

(3) (அ) சி. பா. த அல்லது க. பொ. த (சா. த) பரீட்சையில் 6 பாடங்கள் சித்தியடைந்தவர். அத்துடன்

(ஆ) கணக்குப் பதிவியலாளர் கழக இறுதிப் பரீட்சையில் அல்லது அதனோடொத்த பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் அல்லது அரசாங்க திணைக்களமொன்றில் ஐந்து வருடம் வேலைபார்த்த அநுபவம் அல்லது கணக்குப் பதிவியலாளர் கழக கூட்டுப் பரீட்சையில் அல்லது அதனோடொத்த பரீட்சையில் சித்தியடைந்தவர். அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றில் 10 வருடம் வேலைபார்த்த அநுபவம்.

(ஆ) சம்பளத்திட்டம்.—ரூபா 600—8 × 25 ரூபா 800/- மாதாந்தம் (எல்லாம் உட்பட)

(ii) கணக்குப் பதிவியலாளர் தரம் VI

(அ) தகைமைகள்.—எல்லா விண்ணப்பதாரரும் தான் பின்வரும் தகுதிகள் உடையவரென அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

(1) 1975.04.30 அன்று 22 வயதுக்கு குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் உள்ளார்.

(2) நல்லொழுக்கமும் திடகாத்திரமும் உடையவர்.

(3) (அ) சிரேஷ்ட வர்த்தக மன்ற இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தியவர் அல்லது இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் உயர் வர்த்தகச் சான்றிதழ் அல்லது அதனோடொத்த பரீட்சையில் சித்தியடைந்தவர், அத்துடன்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றில் ஐந்து வருடம் வேலைபார்த்த அநுபவம்.

(ஆ) சம்பளத்திட்டம்.—ரூபா 355—14 × 15/2 × 20—605 மாதாந்தம் (எல்லாம் உட்பட)

2. ஒப்பந்த நிபந்தனைகள்.—இப்பதவிகள் நிரந்தரமானவை. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் சகாய நிதி நன்மைகட்குத் தகுதியுடையவர்.

3. சேவை நிபந்தனைகள் :

(அ) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவிடத்து இப்பதவியில் நியமனம் பெறுவதற்கு முன் அவர் அரசாங்கத்தில் வகிக்கும் நிலையான பதவியைத் துறத்தல் வேண்டும். அப்படியாக அரசாங்க அதிகாரத்துடன் பதவியைத் துறக்குமிடத்துச் சபையின் சேவையிற் சேரும் தருணத்தில் உபகாரச் சம்பளச் சுற்றறிக்கையின் 48அ பிரிவிலுள்ளபடி உபகாரச் சம்பள நன்மைகள் யாவற்றையும் தொடர்ந்து வைத்திருப்பார். திணைக்கள கூட்டுத்தாபன உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் யாவும் 1965 ஓகத்து 20 ம் திகதி வெளிவந்த 666 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைக்கிணங்கவே கவனிக்கப்படும். திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவர்கள் மேற்குறிப்பிட்ட திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்க உத்தியோகத்தர்களை விடுவிக்க முடியுமா என்பதைத் தெளிவாக்க் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) நியமனங்கள் யாவும் நியமித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகட்குத் தேர்வாய்வு முறையில் அமையும்.

(இ) விண்ணப்பதாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கு இணங்கவும் தற்போதிருக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப்படும் சட்டங்களுக்கும் இணங்கவும் அரசாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவர்.

(ஈ) தேர்வாய்வுக்குரிய கால எல்லை முடிந்தபின் உறுதிப்படுத்துவது பிறவற்றுள் அரசாங்க மொழித் தேவைகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்கும்.

4. மருத்துவச் சோதனை.—நியமனம் பெறுபவர் மருத்துவச் சோதனையில் தேறுதல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க்குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (பி. கு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.)

(ஆ) பெறப்பட்ட மிகக்கூடிய கல்வித் தகைமை உயர் தொழிலுக்குரிய தகைமைச் சான்றிதழ்கள்.

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு ; இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர், கல்லூரிப் போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) முன்னர் வேலை வழங்கியவர்களிடமிருந்து அங்கு செய்த கடமைகளின் தன்மையைக் காட்டும் சான்றிதழ்கள்.

6. மேற்குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாது அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகள் யாவும் தலைவர், தேசிய பாற்சபை, த. பெ. எண் 1155, நாரஹேன்பிற்ற, கொழும்பு 5 என்ற விலாசத்திற்கன்றி சபையின் சேவையிலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கோ தனிப்பட்ட முறையில் அனுப்பக்டாது.

8. ஒரு அரசாங்க திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விலகிய விண்ணப்பதாரர்கள் தாம் விலகியமைக்கான காரணத்தைக் குறிப்பிட வேண்டும்.

தலைவர்,
பாற்சபை.

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 5.

விண்ணப்பப் படிவம்

1. பதவி :————.

2. முழுப்பெயர் :————.

3. தனிப்பட்ட முகவரி :————.

4. விண்ணப்பதாரர் பிறந்த இடமும் திகதியும் :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைத்தல் வேண்டும்)

5. விண்ணப்பதாரரின் தந்தையின் பிறப்பிடம் :————.

6. உயர்கல்வி, தொழிலுக்குரிய தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

7. சிங்களம்/தமிழ் ஆகியவற்றில் அறிவு :————.

8. முன் அநுபவ விபரங்கள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

9. தற்போதைய உத்தியோக விபரங்கள் :————.

10. விண்ணப்பதாரரின் குணம் பற்றிச் சான்று பகரக்கூடிய இருவரின் பெயர்கள் :————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

4-353—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

நீதி அமைச்சு

மேல்நீதிமன்றங்களின் பதிவாளர்கள் பதவிகள்

மேல்நீதிமன்றங்களின் பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பட்டு செயலாளர், நீதியமைச்சு, அ. பெ. இல. 555, கொழும்பு 12 என்ற முகவரியில் பின்வரும் திகதிகளில் அல்லது அதற்குமுன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—மே 31, 1975.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—யூன் 05, 1975.

குறிப்பு.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ள அலுவலரா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் தாமதிப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டியதாகவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, நீதியமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச்சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத்தொழிலரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(அ) பதவி நிரந்தரமானதாகும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர், பகிரங்க சேவைச் சகாயநிதித் திட்டத்திற்கு உதவுதொகை வழங்குதல் வேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் மூன்றாண்டுக் காலமொன்றுக்கு தகுதிகாண் நிலையில் இருப்பார்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய ஒன்று திரண்ட சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—ஆண்டொன்றுக்கு ரூபா 7,800—360 ரூபா கொண்ட 9 சம்பள உயர்வுகளும் 780 ரூபா கொண்ட 12 சம்பள உயர்வுகளும்—ரூபா 16,800 வரை.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வோர் அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) 1975 மே 31 ஆந் தேதியன்று 30 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும்,

(ஆ) சட்டத்தரணியொருவராகவிருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் ஆவனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்போது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு—சமயநீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டத்திற்கான அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழில் நுட்பத்தகைமையும்/ உயர்தொழிற்றகைமை அல்லது தொழில் நுட்பத்தகைமை பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) ஆவணங்களையாயினும், ஆவணங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை நீதியமைச்சின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பம் கிடைக்கப்பெற வேண்டிய கடைசித் திகதியன்று அல்லது அதற்குமுன்னர், செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், நீதியமைச்சு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இவ்வலுவலகத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்கு ஏற்புடைத்தான பொது நிபந்தனைகள், இந்த கசெற்றில் I ஆம் பாகம், (IIஅ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

செயலாளர்,
நீதியமைச்சு.

நீதியமைச்சு,
அ. பெ. இல. 555,
கொழும்பு 12.
1975, ஏப்பிரல் 09 ஆந் நாள்.

4-354—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

கொழும்பு நகரத்துக்கு சடுதி மரண விசாரணையாளர் பதவி

கொழும்பு நகரத்துக்காய சடுதி மரண விசாரணையாளர் பதவிக்குப் பின்வரும் தகைமையுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பங்கள் கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரதியில் செய்யப்பட்டு அவை கொழும்பு 12, நீதியமைச்சின் செயலாளரை 75.04.24 ஆந் தேதியன்றோ அல்லது அதன் முன்னரோ அடையும்படி அனுப்பப்படவேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கொழும்பு நகரத்துக்கு சடுதி மரண விசாரணையாளர்" என எழுதப்படவேண்டும்.

2. இப்பதவி ஒரு குறித்த சம்பளத்தைக் கொண்டதல்ல. எனினும் நடாத்தப்படும் ஒவ்வொரு விசாரணைக்கும் 10 ரூபா வழங்கப்படும்.

3. தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தான்—

(அ) 75.05.01 ஆந் தேதியன்று 35 வயதுக்குக் குறையாதவரென்பதற்கும் 55 வயதுக்கு மேற்படாதவரென்பதற்கும் ;

(ஆ) நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவரென்பதற்கும் ;

(இ) ஆகக் குறைந்தது 6 வருட அனுபவமுள்ள ஓர் சட்டத்தரணியென்பதற்கும் ;

(ஈ) கொழும்பு மாநகர எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவரென்பதற்கும் ;

(உ) சிங்களத்தில்/தமிழில் கடமைபுரியப் போதிய அறிவு உடையவரென்பதற்கும் ;

போதிய சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர் பின்வரும் பத்திரங்களின் பிரதிகளையும் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்.

(ஆ) மிக உயர் கல்வி, உயர்தொழிற் சான்றுப்பத்திரங்கள்.

(இ) ஒழுக்கம் பற்றிய இரு சமீபகாலச் சான்றுப் பத்திரங்கள்.

5. அரசாங்க சேவையாளர், கூட்டுத்தாபன ஊழியர், உள்ளூராட்சிச்சபை ஊழியர், உள்ளூராட்சிச் சபைமன்ற உறுப்பினர் ஆகியோரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. விண்ணப்பங்கள் பெறப்பட்டவை அறிவிக்கப்படமாட்டாது.

நிஹால் ஜயவிக்கிரம,
நீதியமைச்சின் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1975, ஏப்பிரல் 02 ஆந் தேதி.

கொழும்பு நகரத்துக்கு சடுதி மரண விசாரணையாளர் பதவி

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :————.
(பெரிய எழுத்தில் முதற்பெயர்களுடன்)

2. நிரந்தர வதிவிடமும், வதியும் காலவெல்லையும் :————.

3. (அ) 75.04.24 ல் வயது :————.
(ஆ) பிறந்த தேதியும், இடமும் :————.

4. விவாகமானவரா, தனியாளா :————.

5. வர்த்தமானி அறிவித்தலின் 3(உ) பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமையும், 3(இ) பந்தியில் குறிப்பிட்டவாறு சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட தேதியும் :————.

6. தற்போதய பதவி :————.

7. முன்னர் வேறு பதவி வகித்திருப்பின் அவற்றின் விபரங்கள் :
————.

8. விண்ணப்பதாரர் பணநெருக்கடிக்காளாயுள்ளாரா ? அப்படியாயின் விபரங்கள் :————.

9. விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் யாதாயினும் தவறுக்குக் குற்றவாளியாக்கப்பட்டுள்ளாரா ? :————.

10. இப்பதவிக்குத் தேவையான வேறு விசேட தகைமைகளிருப்பின் அவற்றின் விபரம் :————.

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

4-344—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### ஆசிரியர் கலாசாலை (விசேட) இறுதிப் பரீட்சை

1972 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முந்திய ஆண்டுகளில் ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சையில் தவறிய அல்லது குறை சித்தி எய்திய ஆசிரியர்களுக்காக 1975 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதியன்று ஆரம்பமாகும், ஆசிரியர் கலாசாலை விசேட இறுதிப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

02. இப் பரீட்சை வாய்மொழி பரீட்சையொன்றையும் எழுத்து மூலப் பரீட்சையொன்றையும் அடக்கினதாயிருக்கும், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் 30—45 நிமிடங்களுக்கு ஒவ்வொரு பாடத்திலும் நேர்முகமாக பரீட்சிக்கப்படுவார் ; எழுத்து மூல பரீட்சை இரண்டு மணி நேரத்துக்கு மேற்படாததாயிருக்கும்.

03. சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளால் பின்பற்றப்பட்ட பாடத் திட்டத்துக்கு அமைவாக, இப் பரீட்சையின் வினாத்தாள்கள் தயாரிக்கப்படும்.

04. பரீட்சைப் பிரவேசம்

(அ) அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவங்களுக்கு ஏற்ப பரீட்சார்த்திகளால் விண்ணப்பப் பாரங்கள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஆசிரியர் கலாசாலைத் தலைவர்கள் ஊடாக, பதிவுத் தபால் மூலம் 1975.05.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கும் வண்ணம், பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு 2, என்ற முகவரிக்கு அவை அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) 12×8 அங்குல பிரமாணமுடைய தாளைத் தவிர வேறொரு தாளை விண்ணப்ப பாரத்தை தயாரிப்பதற்கு உபயோகித்தல் ஆகாது.

(இ) ஒவ்வொரு விண்ணப்பப் பாரத்தையும் அடக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் " ஆசிரியர் கலாசாலை விசேட் இறுதிப் பரீட்சை " என்று எழுதுதல் வேண்டும்.

05. பரீட்சைக் கட்டணம்

(அ) இப் பரீட்சையின் தொடர்பிலே ஒரு பாடத்துக்கு 15 ரூபாவும், இரண்டு பாடங்களுக்கு 30 ரூபாவும், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களுக்கு 40 ரூபாவும், முத்திரைக் கட்டணமாக கட்டப்படல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் உரிய தொகையின் சார்பிலே முத்திரைகளை ஒட்டி தனது கையொப்பத்தையும் திகதியையும் இடுதல் மூலம் அவற்றை இரத்து செய்தல் வேண்டும். இரத்து செய்யப்படாத முத்திரைகள் தொடர்பில் திணைக்களம் எத்தகைய பொறுப்பும் உள்ளதாய் இருக்காது.

(இ) சுகவீனம் அல்லது ஏனைய ஏதும் காரணம் உட்பட எந்தக் காரணத்துக்காகவும் பரீட்சைக்குத் தோற்ற முடியாமைக்கு முழுதாகவோ பகுதியாகவோ கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

06. விண்ணப்பப் பாரங்களை நிராகரித்தல்

பின்வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு பரீட்சார்த்திகள் அறிவிக்கப்படுவார்கள்.

(அ) உரிய பரீட்சைக் கட்டணத்தை கொண்டிராத விண்ணப்பப் பாரங்கள்.

(ஆ) முடிவுத் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள்.

விண்ணப்பங்கள் தபாலில் காணமற்போயின் அல்லது தாமதமாகின போன்ற முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

06.02. விண்ணப்பப் பாரமொன்று நிராகரிக்கப்படும்பொழுது முத்திரைக் கட்டணம் இழக்கப்படும்.

07. பிரவேச அட்டைகள்

(அ) ஒவ்வொரு பரீட்சார்த்திகளதும் சொந்த முகவரிக்கு பிரவேச அட்டைகள் தபால் செய்யப்படும்.

(ஆ) பரீட்சை ஆரம்பமாக சுமார் ஏழு நாட்களிலிருக்கும் பொழுது பிரவேச அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்று செய்திப் பத்திரிகைகளிலும் வானொலியிலும் அறிவித்தல் செய்யப்படும்.

அத்தகைய அறிவித்தலை எல்லாப் பரீட்சார்த்திகளும் கவனித்தல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்தியொருவருக்கு பிரவேச அட்டை கிடைக்காவிட்டால், அவர் உடனடியாக முடிந்தால் தந்தி மூலமாக, கொழும்பு 2, மலே வீதியிலுள்ள, பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுதல் வேண்டும். (த. பெ. 1503. தந்தி முகவரி " எக்ஸாம்ஸ் " கொழும்பு.) முடியுமானால், நேர்முகமாக பரீட்சைத் திணைக்களத்தின், ஒழுங்கு படுத்தற் கிளையில் விசாரிக்கவும். இத்தகைய சந்தர்ப்பத்திலே, பரீட்சார்த்திகள் பின்வரும் தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பரீட்சையின் பெயர்.
(2) பரீட்சார்த்தியின் முழுப் பெயர்.
(3) முழு முகவரி.
(4) அனுப்பப்பட்ட திகதி, அஞ்சல் அலுவலகம், பதிவிலக்கம்.

08. அடையாளப் பத்திரங்கள்

மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையிலே, பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திலே தமது ஆளடையாளத்தை நிருபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் பத்திரங்களுள் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) அஞ்சல் அதிபர் நாயகத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டை.

(ஆ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.

(இ) இப் பரீட்சைத் திகதிக்கு முன்பு மூன்று வருடத்துக்கு மேற்படாத காலத்துள் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச் சீட்டொன்று.

(ஈ) இப் பரீட்சைத் திகதிக்கு முன்பு, மூன்று வருடத்துக்கு மேற்படாத காலத்துள் அரசாங்கத் திணைக்களமொன்றினால் வழங்கப்பட்டதும், உரிமையாளரின் புகைப்படத்தையுடையதுமான, ஏதேனும் சான்றிதழ், உத்தரவுப்பத்திரம் அல்லது ஏனைய பத்திரம்.

(உ) பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உடையதும், உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்டதுமான, கடவுச் சீட்டு பிரமாணமுள்ள புகைப்படமொன்று.

பரீட்சை முடிவுகள்

பரீட்சை முடிவுகள் அவரவரது ஆசிரியர் கலாசாலைகளுக்கு அனுப்பப்படுமாதலால், தத்தமது முகவரியை தத்தமது ஆசிரியர் கலாசாலைத் தலைவருக்குக் கொடுத்தல், ஒவ்வொரு பரீட்சார்த்தியினதும் பொறுப்பாகும்.

### மாதிரி விண்ணப்பப் பாரம்

1972 இலும் அதற்கு முந்திய ஆண்டுகளிலும் நடத்தப்பட்ட பரீட்சைகளில் தவறிய அல்லது குறை சித்தி எய்திய ஆசிரியர்களுக்கான, ஆசிரியர் கலாசாலை விசேட இறுதிப் பரீட்சை.

1. முதலெழுத்துக்களுடன் கூடிய குடும்பப் பெயர் :———.
(திருமதி/செல்வி)

2. முகவரி :—
(1) அலுவலக :———.
(2) சொந்த :———.

3. ஆசிரிய பதிவிலக்கம் :———.

4. (1) பயிற்சி நெறி பயின்ற ஆசிரியர் கலாசாலைப் பெயர் :——.
(2) இறுதிப் பரீட்சைக்குப் பரீட்சார்த்தி தோற்றிய ஆண்டு :———.

5. பரீட்சார்த்தி தவறிய அல்லது குறைச் சித்தி எய்திய பாடம்/பாடங்கள் :—

| | | |
|---|---|---|
| (1) | (4) | (7) |
| (2) | (5) | |
| (3) | (6) | |

6. தவறினீர்களா அல்லது குறை சித்தி எய்தினீர்களா ? ———.

7. பரீட்சார்த்தி தோற்றும் மொழி மூலம் :———.

8. பயிற்சி பெற்ற பின்புள்ள கற்பித்தல் அனுபவம் :———.
ஆண்டுகள் மாதங்கள்

9. உங்கள் தனிச் சிறப்புக்கு ஏதுவான விசேட கல்வி அல்லது பிரசுரங்கள் :———.

10. உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஏதுமிருப்பின் அதன் விபரங்கள் :————.

11. முத்திரைகளுக்கான கூடு :—

குறிப்பு.—தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவ தன் மூலம் பரீட்சார்த்திகள் இம் முத்திரைகளை இரத்துச் செய்தல் வேண்டும். மேற்படி விபரங்கள் சரியானவையென நான் உறுதிப்படுத்துகிறேன்.

————
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

கலாசாலைத் தலைவரின் உறுதிப்பாடு :—

மேற்படி பெயருள்ள பரீட்சார்த்தி

(1) ........... இல் ........... ஆசிரியர் கலாசாலையில், ஆசிரியர் பயிற்சி நெறியை பயின்றுர் என்றும்,

(2) ........... இல் நடத்தப்பட்ட ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சையில் தவறினுர்/குறைச் சித்தி எய்தினுர் என்றும்,

(3) எனது முன்னிலையில், இந்த விண்ணப்பப் பாரத்திலே, அவ ரது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்து கிறேன்.

ஆசிரியர் கலாசாலைத் தலைவரின் பெயர் :————.

கையொப்பம் :————.

திகதி :————.

4-336—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

கல்வி அமைச்சு

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வளாகங்களில் 1975 ஆம் ஆண்டு நடைபெறும் விஞ்ஞான மானி (பொது), கலை முது மானி (கல்வி), விஞ்ஞான முது மானி, கலாநிதி (கல்வி), விவசாயப் பட்டம் ஆகிய பட்டப் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு பல் தொழில்நுட்ப நிலையப் போதனுசிரியர்களுக்கும் ஆசிரியர் கலா சாலைப் பயிற்சி ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான படிப்பு லீவு

1975 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பேராதனை, கொழும்பு, வித்தியோதய, வித்தியாலங்கார, யாழ்ப்பாண வளா கங்களில் விஞ்ஞான மானி (பொது), கலை முது மானி (கல்வி), விஞ்ஞான முது மானி, கலாநிதி (கல்வி), விவசாயப் பட்டம் ஆகிய பட்ட உள்ளகப் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள, பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ள பல்தொழில்நுட்ப நிலையப் போதனுசிரியர்கள், ஆசிரியர் கலாசாலை பயிற்சி ஆசிரியர்கள், ஆசிரியை ஆகியோரிடமிருந்து விண்ணப்பங் கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கீழ்க்காணும் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப் பட்டு 'செயலாளர் (பொது நிர்வாகக் கிளை) கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2'' என்ற முகவரிக்கு 1975.05.05 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'படிப்பு லீவுக்கான விண்ணப்பம்—1975 ஆம் ஆண்டு' எனத் தெளிவாக அடையாளம் இடப்பட வேண்டும்.

2. உள்ளகப் பயிற்சி நெறிகளை 1975 ஆம் ஆண்டு பின்பற்று தற்கு பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வோர்க்கு மாத்திரமே படிப்பு லீவு வழங்கப்படும்.

(அ) 15.1.75 அன்று அரசினர் பாடசாலை ஆசிரியராக 3 வருட சேவை பூர்த்தி செய்திருப்பதுடன் பதவியில் உறுதிப் படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) 1.1.75 அன்று 45 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

(இ) க. பொ. த. (உயர்தர)ப் பத்திரப் பரீட்சையில் கீழ்க் காணும் பாடங்களில் குறைந்தபட்சம் இரண்டில் சித்தி யடைந்திருப்பதுடன் அவற்றைப் பட்டப் பரீட்சைக்கு எடுக்க வேண்டும்.

| | |
|---|---|
| இரசாயனவியல் | தாவரவியல் |
| பௌதிகவியல் | தூயகணிதம் |
| விலங்கியல் | பிரயோக கணிதம் |

அல்லது

பேராதனை/குண்டசாலை விவசாயப் பாடசாலைத் தராதரப் பத்தி ரம் அல்லது ஹார்டி சிரேஷ்ட தொழில் நுட்பக் கல் லூரித் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றிருப்பதுடன் ஆசிரியராக 5 வருட சேவை புரிந்திருக்க வேண்டும். மேலும் பொதுத் தகுதிப் பரீட்சையில்/க. பொ. த. (உயர் தர) ப் பத்திரப் பரீட்சையில்/விவசாயத்திலான பட்டப் பயிற்சி நெறியைப் பின்பற்றுதல் பொருட்டு அரசாங்க திணைக்கள உத்தியோகத்தர்களுக்கென இலங்கைப் பல் கலைக் கழக விவசாய பீடத்தால் நடாத்தப்படும் விசேட பரீட்சையில் சித்தியடைந்ததன் பெயரில் இலங்கைப் பல்கலைக் கழக விவசாய பீடத்தின் முதல் வருட பயிற்சி நெறியிலிருந்து தவிர்வளிக்கப்பட்டு விவசாயப் பட்டப் பயிற்சி நெறியைப் பின்பற்றுதற்குத் தெரிவு செய்யப் பட்டிருக்க வேண்டும்.

அல்லது

பல்கலைக் கழகம் ஒன்றால் நடாத்தப்படும் பொதுத் தகுதிப் பரீட்சையில் அல்லது இடைமானிப் பரீட்சையில் கீழ்க் காணும் பாடங்களில் குறைந்தபட்சம் ஒன்றில் சித்தி யடைந்திருப்பதுடன் அதனைப் பட்டப் பரீட்சைக்கு எடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| உயிரியல் | விலங்கியல் | பிரயோக கணிதம் |
| இரசாயனவியல் | தாவரவியல் | |
| பௌதிகவியல் | தூயகணிதம் | |

குறிப்பு.—கலை முது மானி (கல்வி), கலாநிதி (கல்வி) பட்டப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு மேலுள்ள 2 (இ) ஆம் பந்தி அமையாது.

3. பின்வருவோர் படிப்பு லீவுக்கு உரித்திலர்

(அ) 15.1.75 அன்று 3 வருட சேவையைப் பூர்த்தி செய்திராத வர்கள்.

(ஆ) ஒழுக்காற்று நடவடிக்கை விசாரணை யாதேனும் முடிவுரு நிலையிலுள்ளவர்கள்.

(இ) இலங்கைப் பல்கலைக் கழக வளாகங்களில் வெளி மாண வர்களாக மட்டும் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ளவர்கள்.

(ஈ) 1975 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழக வளாகங் களின் உள்ளக மாணவர்களாகத் தெரிவு செய்யப்படாதவர் கள்.

(உ) கலைமானி (சிறப்பு) பட்டத்துக்கு அல்லது பட்டப்பின் பட்டங்களுக்கு இட்டுச் செல்லும் பயிற்சி நெறிகளைப் பின் பற்றும் ஆசிரியர்கள் (கல்வித் தகுதித் தேர்வு அல்லது கலை முதுமானி (கல்வி) அல்லது கலாநிதி (கல்வி) பட்டப் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவோர்க்கு இக்கட்டுப்பாடு அமையாது).

(ஊ) முறி ஒன்றினைச் செய்துள்ளவர்கள் (ரூ. 10,000 க்கு மேற் படாத செலவு பயிற்சி சம்பந்தமாக ஏற்படாது எட்டு வருட காலத்துக்குச் சேவை புரிவதாக முறி செய்துள்ள வர்கள் படிப்பு லீவு நோக்கத்தின் பொருட்டு 5 வருட முறி ஒன்றினை மட்டுமே செய்துள்ளாரெனக் கணிக்கப் படுவர். இதற்கிணங்க 8 வருட கால முறி ஒன்றினைச் செய்து, ஆனல் 1.1.75 அன்று 5 வருடங்களைப் பூர்த்தி செய்யாதவர்களுக்குப் படிப்பு லீவு வழங்கப்படமாட் டாது).

(எ) பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான/கணித தகுதித் தேர்வுப் பயிற்சி நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு ஐந்து வரு டங்களுக்குச் சேவை புரிய வேண்டுமென முறி செய்து

இப்போது ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு ஆனால் 1.1.75 அன்று அம்முறியின் கீழ் 3 வருட சேவையைப் பூர்த்தி செய்திராதவர்கள்.

(ஏ) மகாகமவில் விவசாயத்திலான ஒரு வருட விசேட பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து ஐந்து வருட காலத்துக்குச் சேவை புரிவதாக முறி ஒன்றினைச் செய்து ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு, ஆனால், 1.1.75 அன்று அம்முறியின் கீழ் 3 வருட சேவையைப் பூர்த்தி செய்திராதவர்கள்.

பிரேமதாச உடகம,
கல்வி அமைச்சின் செயலாளரும்
மகா வித்தியாதிபதியும்.

என். பொ. நி. 17/292/75
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
09.04.1975.

மாதிரி விண்ணப்பப் படிவம்

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வளாகங்களில் 1975 ஆம் ஆண்டு நடைபெறும் விஞ்ஞான மானி (பொது), கலை முது மானி (கல்வி) விஞ்ஞான முது மானி, கலாநிதி (கல்வி), விவசாயப் பட்டம் ஆகிய பட்டப் பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு பல்தொழில் நுட்ப நிலையப் போதனாசிரியர்களுக்கும் ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான படிப்பு லீவுக்கான விண்ணப்பம்

1. (அ) முழுப்பெயர் :————.

(ஆ) பதவிப் பெயர் :————.

(இ) பால் :————.

(ஈ) தற்போதைய திரட்டிய மாதாந்தச் சம்பளம் :————.

2. (அ) முதல் நியமனத் திகதி :————.

(ஆ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா :————.
(உறுதிப்படுத்தற் கடிதத்தின் பிரதி இணைக்கவும்)

(இ) ஆசிரியராக பதிவு செய்துள்ள எண் :————.

3. (அ) பிறந்த திகதி :————.

(ஆ) 1.1.75 அன்றுள்ளபடி வயது :————.

4. சொந்த முகவரி :————.

5. தற்போது சேவை புரியும் பாடசாலையின் பெயரும் முகவரியும் (மாவட்டக் குறியீட்டுடன்) :————.

6. கல்வி/உயர் தொழில் தகைமைகள் :————.

7. (அ) 1.1.75 வரையுள்ள மொத்தச் சேவை :———— வரு : ………… மாதங்கள்.

(ஆ) 1.1.75 வரையுள்ள சேவை விபரம் (மாணவ ஆசிரியராகச் சேவை புரிந்திருப்பின் அது புறம்பாகக் காட்டப்பட வேண்டும்) :

| பாடசாலை | தொடக்கம் | வரை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

8. ஆசிரியர் கலாசாலை ஒன்றில் யாதேனும் பயிற்சி நெறியைப் பின்பற்றியிருப்பின் பயிற்சி நெறிக் காலத்தையும் ஆசிரியர் கலாசாலைப் பெயரையும் குறிப்பிடுக.

| ஆசிரியர் கலாசாலை | தொடக்கம் | வரை |
|---|---|---|

9. அத்தகைய பயிற்சி நெறிதொடர்பில் செய்துள்ள (செய்திருப்பின்) முறியின் காலம் : ………… தொடக்கம் ………… வரை.

10. வேறு யாதேனும் பயிற்சி நெறி பின்பற்றியிருக்கிறீரா? (அங்ஙனமாயிருப்பின் படிப்பு லீவுக்காலம், நோக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும்) :————.

11. அத்தகைய பயிற்சி நெறி தொடர்பில் செய்துள்ள (செய்திருப்பின்) ………… தொடக்கம் ………… வரை.

12. ஆசிரியர் கலாசாலை ஒன்றில் யாதேனும் பயிற்சி நெறியைத் தற்போது பின்பற்றிக் கொண்டிருப்பின் பயிற்சி நெறியின் பெயர், பயிற்சி நெறி ஆரம்பித்த திகதி, ஆசிரியர் கலாசாலைப் பெயர் ஆகிய விபரங்களைக் கொடுக்கவும் :————.

13. 1975 இல் அனுமதிக்கப்படுதற்கு நீர் தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக் கழக வளாகத்தின் பெயர் :————. (அத்தகைய தெரிவை அறிவிக்கும் கடிதத்தின் பிரதி இணைக்கவும்)

14. இலங்கைப் பல்கலைக் கழக வளாகத்தில் நீர் பின்பற்றவிருக்கும் பயிற்சி நெறியும் மொழிமூலமும் :

| பாடங்கள் | போதனாமொழி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

15. (அ) க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் சித்தியெய்திய வருடமும் சித்தியெய்திய பாடங்களும் :

(ஆ) பொதுத் தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களும் சித்தியடைந்த வருடமும் :————.

(இ) இடைமானிப் பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களும் சித்தியடைந்த வருடமும் :————.

16. பயிற்சி நெறி ஆரம்பிக்கும் திகதி :————.

17. (அ) பயிற்சி நெறிக் காலம் :————.

(ஆ) தேவைப்படும் படிப்பு லீவுக் காலம் :————.

18. (அ) கடந்த 5 வருடங்களுள் உமக்கெதிராக யாதேனும் ஒழுக்காற்று நடவடிக்கை சம்பந்தமாக விசாரணை நடைபெற்றதா ?. அங்ஙனமாயின், கல்வித் திணைக்கள்/அமைச்சு கடிதங்களின் தொடர்பிலக்கத்துடன் விபரங்கள் கொடுக்கவும் :————.

(ஆ) உமக்கெதிராக யாதேனும் ஒழுக்காற்று நடவடிக்கை விசாரணை முடிவுறாத நிலையில் இருப்பின் கல்வித் திணைக்கள/அமைச்சுக் கடிதங்களின் தொடர்பிலக்கத்துடன் விபரங்கள் கொடுக்கவும் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் உறுதியளிக்கின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் ஒப்பம்.

திகதி :————.

மேற்குறித்த ஆசிரியர் இக்கல்லூரியில் ………… 197… தொடக்கம் சேவை புரிகிறாரென அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
பாடசாலைத் தலைவரின் ஒப்பம்.

………………………… வித்தியாலயம்,

திகதி : ………………

(பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடுக)

4-352—18,04,75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

## நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சு

ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பு தொழில் நுட்ப உத்தியோ கத்தர்களை தொழில் நுட்ப உத்தியோகத்தர் சேவையின் II ம் வகுப்பிற்குப் பதவி உயர்த்தும் பொருட்டு நடாத்தப்படும் முதலாம் பரீட்சை

(1974.10.25 ஆம் திகதி 135 ஆம் இலக்க 10–602/1 வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்க)

மேற்கூறப்பட்ட பரீட்சை பின்வரும் திகதிகளில் கொழும்பில் நடாத்தப் படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 75.06.09 — பிரிவு I | — (1) பிரயோக கணிதம் |
| பிரிவு I | — (2) அளவெடுத்தலும் மட்டம் பார்த்தலும் (கோட்பாடு) |
| 75.06.10 — பிரிவு I | — (3) நீரியல் |
| பிரிவு III | — (1) அளவியலும், கணிய அளத்தலும் |
| 75.06.11 — பிரிவு III | — (2) அமைப்புப் படம் வரைதல் |
| பிரிவு IV | — (1) தொடக்க நிர்மாணமும் பெருவீதிகள் பராமரிப்பும் |
| 75.06.12 — பிரிவு IV | — (2) தொடக்கக் கட்டிட நிர்மாணம், நீர் வழங்கல் வடிகாலமைப்பு |
| பிரிவு IV | — (3) நீர்ப்பாசனமும், நீர் முகாமையும் |
| 75.06.13 — பிரிவு V | — (1) கணக்குகள், திணைக்கள ஒழுங்கு விதிகள், கட்டளைச் சட்டங்கள் |
| பிரிவு V | — (2) பொறிமுறைச் சாதனங்கள் தொடக்க வேலையும் பராமரிப்பும் |

பரீட்சார்த்திகள் ஒரே தடவையில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களுக்கோ தோற்றலாம்.

அளத்தலும் மட்டம் பார்த்தலும் (செய்முறை) இப்பரீட்சைக்கான திகதி பரீட்சார்த்திக்குப் பின்னர் அறிவிக்கப்படும்.

2. பரீட்சார்த்திகள் இத்துடன் இணைக்கப்பட்டதைப் போன்ற மாதிரிப் படிவத்தின்படி தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களினூடாகச் செயலாளர், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சு, கொழும்பு 1 என்ற முகவரிக்கு 75.05.12 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. பரீட்சார்த்தி பரீட்சை நடக்கும் திகதியிலிருந்து குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் அவரது பிரவேசப் பத்திரம் கிடைக்காவிடின் தாமதமின்றிச் செயலாளர், நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சு, கொழும்பு 1 என்ற முகவரிக்குத் தமக்குப் பிரவேசப் பத்திரம் கிடைக்கவில்லை என்பதை அறியத் தருவதுடன் கீழ்க்காணும் தகவல்களையும் தருதல் வேண்டும்:—

(1) முழுப்பெயர்.
(2) பரீட்சையின் பெயர்.
(3) எத்திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பம் அனுப்பப்பட்டது.

5. 5 ம் பந்தியில் காட்டப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறிய பரீட்சார்த்திகள் பின்னர் வைத்துக் கொள்ளப்படும் கடிதப் போக்குவரத்துகள் வரவேற்கப்படமாட்டா.

